உலக வரலாற்றில் முதன்முறையாக e-mail இல் வெளிவரும் இதழ்


www.aanmeegamalar.com வெளியிடும்

e-magazine

# ஆன்மிகமலர் மெயில் புக்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மலர்-8 இதழ்-193

மார்ச் 16-31 2026




சப்த மாதர் சப்த கன்னியர் வித்தியாசம்!

e-magazine

# கருப்பசாமி தோற்றமும் சிறப்பும்

# ஏழுவித சக்திகள் காக்கும் இல்லம்



வீடுகளில் ஏழு குதிரைப் படத்தைவைத்திருப் பதைபார்த்திருப்போம், அந்த ஏழு குதிரைகளுக்கும் ஒவ்வொரு சக்தி உள்ளதாகவும், அந்த சக்திநமது இல்லத்தில் இருந்தால் அனைத்தும் நன் மையாக நடைபெறும் என்ற நம்பிக்கையில் அந்தப் படத்தை வைத்திருப்போம், ஆனால் அந்தப்படத்தின் உண்மையான விளக்கம் என்பது, சூரியனின் தேரை ஏழு குதிரைகள் இழுக்கும், அந்த தேரை இழுக்கும் ஒவ்வொரு குதிரைக்கும் ஒவ்வொரு சக்தி உள்ளதாக புராணங்கள் கூறுகின்றன.

உயிர்சக்தி, ஒளி, அறிவு, வேகம், முன்னேற் றம், ஒழுக்கம், கால ஓட்டம், என பல உயர்ந்த தத்துவங்களை குறிக்கின்றன. இந்த தத்துவங் களை கொண்ட குதிரை சிறப்பாக செயல்பட சூரியன் அவசியம் தேவை.

இந்த சக்திகளை கொண்ட ஒரு இல்லம் சீரும் சிறப்பாகவும் இருக்கும் என்பதால், ஏழு குதிரைகளுடன் உதிக்கும் சூரியனை வைத்து உருவாக்கப்பட்ட படம்தான் அது.

காலப்போக்கில் மத ரீதியாக, சூரியனை புறக்கணித்து குதிரைகளை மட்டும் வைத்துக் கொள்ள ஆரம்பித்தனர். ஆனால் உண்மையில் அந்த குதிரைகளுடன் சூரியனும் இருப்பது போன்று படம் இருந்தால்தான், அந்த படத்திற் குரிய பலன் முழுமையாக கிடைக்கும்.

அதனால் தான், அக்காலத்தில் சூரியனுடன் ஏழு குதிரைகள் ஓவியம் வைத்திருந்தனர், இதை பார்த்து கண்விழிக்கும் மனோ பாவமும் மக்களிடம் இருந்தது, பொதுவாக இதுபோன்ற படங்களை மங்களகரமானதாக கருதினர்.

வாஸ்து சாஸ்திரத்தின் பார்வையில் ஓடும் நிலையில் இருக்கும் 7 குதிரைகள் பின்பகுதி யில் சூரியன் உதயம் இருப்பது போன்ற படம் வைத்திருந்தால், அந்த இல்லத்தில் சாதனை மற்றும் வளர்ச்சி அபாரமாக இருப்பதாக அர்த்தம்.

மேலும் அதுபோன்ற படம், வீட்டிலும், அலு வலகத்திலும் முன்னேற்ற சக்தியை அதிகரிக்கும்.

- இந்தப் படத்தை வைக்க சிறந்த திசை தெற்கு.
- தெற்கு சுவர் இல்லையெனில் கிழக்கு அல்லது வடக்கு திசையில் வைக்கலாம்.
- குதிரைகள் அறைக்குள் ஓடும் போல் இருக்க வேண்டும். கதவை நோக்கி வெளியே ஓடும் போல் இருக்கக் கூடாது.
- ஓடும் குதிரைகள் வெளியே நோக்கி இருந் தால், வீட்டின் செழிப்பு மற்றும் ஆற்றல் வெளியேறுகிறது என்று கருதப்படுகிறது.

e-magazine
aanmeegamalar.com

# மனதளவில் துன்பமா? தீர்த்துவைக்கும் இருள்நீக்கி அம்மன்







செங்கல்பட்டு அருகே உள்ளது திருக்கச்சூர். இங்கு உள்ள ஒரு மலையில் 2 கோயில்கள் அமைந்துள்ளது. மலை அடிவாரத்தில் உள்ள முதலாவது கோவில்தான் கச்சபேஸ்வரர் அல்லது தியாகராஜர் கோயில்.

இக் கோயில் அடிவாரத்தில் உள்ள இரண்டாவது கோயில் மருந்தீஸ்வரர் கோயில் என்றும் அழைக்கப்படுகிறது.

ஒரு கட்டத்தில் சாலை இரண்டாகப் பிரிகிறது. இடதுபுறம் மருந்தீஸ்வரர் கோயில் மற்றும் வலதுபுறம் கச்சபேஸ்வரர் கோயில் உள்ளது.

கோயிலின் புராணக்கதை இங்கே. கச்சபம் என்றால் ஆமை என்று பொருள். ஆமை விஷ்ணுவின் 10 மறு அவதாரங்களில் ஒன்றாகும். அவர் அந்த வடிவத்தை எடுத்து பற்கடல்கடலில் இருந்து வெளியே வந்தார்.

விஷ்ணு, ஆமை வடிவத்தை எடுத்த உடனேயே, சிவபெருமானிடம் பிரார்த்தனை செய்கிறார். அந்த இடம்தான் இந்த கோயில்! அதனால்தான் ஒரு மனித ஆமை சிவலிங்கத்தை வணங்கும் தூண் இந்தக் கோவிலில் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள சிவபெருமான் கச்சபேஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார். அவர் விருந்தித்த ஈஸ்வரர் மற்றும் விருந்தித்த வரதர் என்றும் அழைக்கப்படுகிறார்.

ஆன்மிகமலர்

இங்குள்ள அவரது துணைவியார் அஞ்சனாக்ஷி அம்மை என்று அழைக்கப்படுகிறார். ஸ்தல விருக்ஷம் ஆலமரம், குளம் கூர்ம தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது.

இந்த இடத்தின் மற்றொரு புராணக்கதை என்னவென்றால், முனிவர் சுந்தரர் இங்கு வந்தபோது, அவர் பசியுடன் இருந்தார். எனவே சிவபெருமான் ஒரு மனித வடிவத்தை எடுத்து சுந்தரருக்கு உணவு பரிமாறினார். தமிழில் ஒரு விருந்து ‘விருந்து’ என்று அழைக்கப்படுகிறது, எனவே இங்குள்ள சிவன் விருந்து இட்ட ஈஸ்வரன் என்று

e-magazine
aanmeegamalar.com



அழைக்கப்படுகிறார்.

வாழ்க்கையில் ஏதோ ஒரு கட்டத்தில் "அடுத்தது என்ன?" என்ற இருள் நம்மைச் சூழும். அந்த அக இருளையும், புற இருளையும் நீக்கி ஒளி தரவல்ல ஒரு சக்தி வாய்ந்த தலம் தான் இது.

இங்கு எழுந்தருளியிருக்கும் அன்னையின் திருநாமமே அத்தனை அழகு... "அருள்மிகு இருள்நீக்கி அம்மன்" (அஞ்சனாக்ஷி / அந்தக நிவாரணி).

### யார் இந்த இருள்நீக்கி அம்மன்?

திருக்கச்சூர் ஆலக்கோயிலில் கச்சபேஸ்வரரின் இடப்பாகத்தில் அமர்ந்து அருள்மழை பொழிகிறாள் இந்த அன்னை. இவள் வெறும் பெயரளவில் மட்டும் இருள்நீக்கி அல்ல; நிஜமாகவே ஒளி யிழந்தவர்களுக்கு ஒளி தந்தவள்.

ஒருகாலத்தில் சூரியனும், சந்திரனும் தங்கள் ஒளியை இழந்தபோது, இந்தத் தலத்திற்கு வந்து அன்னையை வழிபட்டு மீண்டும் பிரகாசமான ஒளியைப் பெற்றதாக வரலாறு கூறுகிறது. உலகிற்கே ஒளி தரும் கிரகங்களுக்கே ஒளி தந்தவள் இவள்!

'அந்தக நிவாரணி' என்று அழைக்கப்படும் இந்த அன்னை, கண் பார்வை குறைபாடு உள்ளவர்களுக்கும், கண் நோய்களால் அவதிப் படுபவர்களுக்கும் கண்கண்ட தெய்வமாக விளங்குகிறாள்.

ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களால் நம் மனம் இருண்டு போயிருக்கும்போது, அந்த அறியாமை இருளை அகற்றி ஞான ஒளியை ஏற்றுபவள் இந்த இருள்நீக்கி அன்னை.

தொழில் நஷ்டம், குடும்பக் குழப்பம் என வாழ்வின் திசை தெரியாமல் தவிப்பவர்கள் இவள் சந்நிதியில் நெய் தீபமேற்றி வழிபட்டால், நிச்சயம் ஒரு நல்ல வழி பிறக்கும் என்பது பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

காலை 8:00 12:00 மணி வரை மாலை 5:00 இரவு 8:00 மணி வரை தரிசிக்கலாம்.

அமைவிடம்: அருள்மிகு கச்சபேஸ்வரர் திருக் கோயில், திருக்கச்சூர் (சிங்கப்பெருமாள் கோவில் ஸ்ரீபெரும்புதூர் பாதையில் உள்ளது).





e-magazine
aanmeegamalar.com




# சப்த மாதர்களுக்கும் சப்த கன்னியர்களுக்கும் உள்ள வித்தியாசம்!

நாம் அன்றாட பேச்சு வழக்கில் "சப்த மாதர்கள்" "சப்த கன்னியர்கள்" என்ற இரு பெயர்களையும் ஒரே பொருளாகவே பயன்படுத்தி விடுகிறோம்.

ஏனெனில்ஷெ இருவரும் ஏழு பேர் கொண்ட தொகுதி இருவரும் பெண் தெய்வ சக்திகள் இருவரும் காவல், அருள், வெற்றி ஆகியவற்றுடன் தொடர்புடையவர்கள் இவை அவர்களுக்குள் உள்ள ஒற்றுமைகள்.

ஆனால், புராணங்களையும் கிராமிய வழிபாட்டு மரபுகளையும் ஆழமாகப் பார்த்தால்,

சப்த மாதர்கள். சப்த கன்னியர்கள் இருவருக்கும் பல அடிப்படை வேற்றுமைகள் இருப்பதை உணர லாம். அவற்றை விரிவாகவும் தெளிவாகவும் பார்ப் போம்.\

## சப்த மாதர்கள்

புராணங்கள் போற்றும் சப்த மாதர்கள் என்ப வர்கள்:

பிராம்ஹி, மகேஸ்வரி, கவுமாரி, வைஷ்ணவி வாராகி, இந்திராணி, சாமுண்டி

இவர்கள் ஆண் தெய்வங்களின் சக்தியிலிருந்து உருவானவர்கள். அசுரர்களின் ரத்தம் நிலத்தில் விழுந்தால் அவர்கள் மீண்டும் உயிர் பெறுவார்கள் என்பதால், அந்த ரத்தம் பூமியில் சிந்தாமல் தடுக்கவே இந்த சக்திகள் உருவாக்கப்பட்டனர் என்பது புராணக் கதை.

## சப்த மாதர்களின் தனிச்சிறப்புகள்

தெய்வ நிலை கொண்டவர்கள் நான்கு கரங்கள் உடையவர்கள் கரங்களில் போர் ஆயுதங்கள் பெரும்பாலும் வடக்கு நோக்கி அமர்ந்திருப்பவர்கள் முன் பகுதியில் சிங்கம் அல்லது வேதாளம் தனியாக இருக்க மாட்டார்கள்

இவர்களின் வரிசையில் ஒரு புறம்: விநாயகர் – மேற்கு நோக்கி மற்றொரு புறம்: வீரபத்திரர் அல்லது சாஸ்தா அல்லது யோக சிவன் இவர்களில் ஒருவர் கிழக்கு நோக்கி அமர்ந்திருப்பார்.

சப்த மாதர் ஆலயங்களின் அடையாளங்கள்

தன்னைத்தானே தலை வெட்டி வீர பலி அளித்த நவகண்ட வீரர்கள் சிலைகள் அரசர்களின் உருவச்சிலைகள் யானை, குதிரை சிலைகள் அமைக்கப்படுவதில்லை. அன்னை பராசக்தியின்




பஞ்சவர்ண பூஜை, யாகசாலைகள் ஆகியவற்றில் துணை தெய்வங் களாக வழிபடப்படுகிறார்கள்

சப்த மாதர்கள் பெரும்பாலும் கிராம தேவதை களாக அல்லது பெரிய கோவில்களின் பரிவார தெய்வங்களாக இருப்பர். குலதெய்வமாக வழிபடும் வழக்கம் அவர்களுக்கு இல்லை.

## சப்த கன்னிமார்கள் யார்?

சப்த கன்னிமார்கள் என்பவர்கள் திருமணம் ஆகாத கன்னி தேவதைகள்.

இவர்கள் தொன்றுதொட்டு தமிழ் கிராமிய வழிபாட்டு மரபில் மிக முக்கியமானவர்கள்.

கன்னிமார்களின் தனிச்சிறப்புகள்

இரண்டு கரங்கள் மட்டுமே ஒரு கையில் மலர் மற்ற கை சாந்தமாக தொங்க விடப்பட்டிருக்கும் பெரும்பாலும் கிழக்கு நோக்கி, அரிதாக தெற்கு நோக்கி ஒரே வரிசையில் தனியாக அமர்ந்திருப் பார்கள்

இவர்களுக்கு இணையான ஆண் தெய்வம் இல் லை. அதேபோல் தனி தனி பெயர்களும் இல்லை.

## கன்னிமார் ஆலயங்களின் அமைப்பு

வெளிப்புறத்தில் அண்ணன்மார்கள் எனப்படும் ஏழு வீரர்கள் அவர்கள்: கத்தி கேடயம் ஏந்திய வர்களாக அல்லது ஏழு தலைகள் மட்டுமே கோயில் முற்றத்தில்: புலிகள் – நேராக யானை, குதிரைகள் – பக்கவாட்டில்

கன்னிமார்கள் பெருந்தெய்வங்களின் பரிவார மாக அமைக்கப்படுவதில்லை.

ஆனால்– பல கோடி மக்களின் குலதெய்வங்களாக இன்றளவும் வழிபடப்பட்டு வருகின்றனர்.

ஒரே “ஏழு” ஒரே “பெண் சக்தி” என்று பார்த்தால் ஒற்றுமை தெரியும். ஆனால் – வரலாறு, வழிபாட்டு முறை, தோற்றம், சக்தி வெளிப்பாடு எல்லாவற்றிலும் சப்த மாதர்களும் சப்த கன்னியர்களும் முற்றிலும் வேறுபட்டவர்கள்.

இந்த வேறுபாடுகளை அறிந்துகொள்வதே நம் ஆன்மிக மரபின் ஆழத்தை புரிந்து கொள்வதற்கான முதல் படி.

## சப்த மாதர்கள் சப்த கன்னியர்கள் சுருக்கமான வேறுபாடு

| அம்சம் | சப்த மாதர்கள் | சப்த கன்னியர்கள் |
|---|---|---|
| தோற்றம் | புராண தெய்வங்கள் | கிராமிய தெய்வங்கள் |
| கரங்கள் | நான்கு | இரண்டு |
| ஆயுதம் | உண்டு | இல்லை |
| இணை | ஆண் தெய்வமஉண்டு | இல்லை |
| குலதெய்வம் | இல்லை | உண்டு |
| வழிபாடு | வைதீக + ஆகம முறை | தொன்றுதொட்டு |

e-magazine
aanmeegamalar.com

உங்கள் பகுதியில் உள்ள கோவில் கும்பாபிஷேகம், சிறப்பு விழாக்கள், போன்றவற்றை

# tabloid வடிவில்

4, 8, 12, 16 பக்கங்களில்

**இதுபோன்ற சிறப்பு மலராக வெளியிட தொடர்பு கொள்ளவும்**

தரமாகவும், சிறப்பாகவும் செய்து தருகிறோம்...!


தொடர்பு கொள்ளவும்
அழகுராஜா
முதன்மை செய்தியாளர்
செல்: 9994323622
9444228203




# கருப்பசாமி தோற்றமும் சிறப்பும்



ஸ்ரீராமருக்கு இரு புதல்வர்கள், சீதை லவனை மட்டுமே பெற்றதாகவும், தண்ணீர் பிடிக்க சீதை சென்ற போது லவனை பார்த்துக்கொள்ளுமாறு வால்மீகி முனிவரிடம் கூறி சென்றாள்.

திரும்ப வந்து லவனை சீதை தூக்கி சென்று பர்ணசாலைக்கு வெளியே உணவு ஊட்டிக் கொண்டிருந்தாள். இது தெரி யாத வால்மீகி முனிவர், குழந்தையை காணாது, சீதை சபிப்பாளோ என்று பயந்து தர்ப்பை புற்களை தன் தவ வலிமையால் உருவேற்றி லவ னை போன்ற ஒரு குழந் தையை உருவாக்கி னார்.

குசன் என்றபுதிய பிள்ளையையும் சேர்த்து சீதை இரு பிள்ளைகளையும் தன பிள்ளையாகவே வளர்க்கிறாள்.

ராமர் கானகம் வந்து சீதையிடம் இரண்டில் எது நம் குழந்தை, என கேட்கிறார், உடனே தீக்குளித்த சீதை அதையே தன்மகன் களை செய்யச் சொல்ல, லவன் பிழைத்து வர, குசன் மட்டும் யாக தீயில் கருக,

ஸ்ரீராமரும் உயிர் தந்து குசனை காக்க, தீயில் கருகியதால் கருப்பா என்று அழைத்தாராம். அது முதல் அவர்தான் கருப்பண்ணசாமியானார் என்று ஒரு கதை மக்களால் கூறப்படுகிறது.

பெரும்பாலும், மது, கஞ்சா, மாமிசம் கொண்டே வணங்கப்படுகிறார். பொங்கலிட்டு, பூமாலை சார்த்தி மேள, தாளங்களோடு ஆர்ப்பாட்டமாய் இவரின் திருவிழா கொண்டாடப்படுகிறது.

மக்கள் தங்கள் சொத்து, சுகம், மக்கள், மாடு போன்ற எல்லா செல்வங்களுக்கும், சுகங்களுக்கும் இவரே காவல் என்று நம்புகின்றனர். எதிரி பயம் நீங்கவும், கொலை, களவு ஏற்ப்படாமல் இருக்கவும் இவரே கதி என்று இவருக்கு படையல் இடுகின்றனர்.

கருப்பன், கருப்பணன், கருப்பு, கருப்பண்ணசாமி என்று பயபக்தியோடு வணங்கப்படும் துடியான கிராம காவல் தெய்வம், கருப்பசாமி. கறுப்பன் அமர்ந்த இடத்தைக் கொண்டு பல்வேறு விதமாய் கருப்பரை அழைப்பதுண்டு. சங்கிலி கறுப்பன், கறுப்பனார் சாமி, குல கறுப்பனார், பதினெட்டாம்படியான், சின்ன கருப்பசாமி, பெரிய கருப்ப சாமி, மீனமலை கருப்பசாமி, முன்னோடை கருப்பசாமி, நொண்டி கருப்பசாமி, ஒண்டி கருப்பசாமி என கருப்பசாமி வழிபாடு தமிழ்நாட்டு கிராமங்களில் இருக்கின்றது.

கருப்பன், கருப்புசாமி, கருப்பாயி எனும் பெயர்களைத் தென் தமிழர்கள் தம் குழந்தைகளுக்கு பெயராக சூட்டுவது காணலாம். தமிழ் நாட்டு கிராம தெய்வங்களிலேயே மிகவும் சிறப்பு பெற்ற தெய்வமாக கருப்புசாமி இருந்து வருகிறார். கருப்பு சாமி இல்லாத கிராமங்களே இல்லை எனலாம்.

அடர்ந்த மீசையும், உருட்டிய விழிகளும், சிவந்த உதடும், ஓங்கிய அருவாளும், குதிரை வாகனமும் கொண்டு குலை நடுங்கும் தோற்றம் கொண்டவர் கருப்பன். உயர்ந்த உருவமும், கருத்த மேனியும் வேகமான ஓட்டமும், துடியான ஆட்டமும் கொண்டவர். எந்த எதிரிகளையும் அழிக்க வல்லவர். இவரிடம் பொய்யோ, ஏமாற்றமோ செல்லுபடி ஆகாது. நம்பியவருக்கு காவலாகவும், எதிர்ப்பவர்களுக்கு எமனாகவும் இருப்பவர் கறுப்பர். பரமசிவன் அம்சம் என்றும், பத்ரகாளி அம்சம் என்றும் வணங்கப்படுகிறார். தென் தமிழ்நாட்டின் எல்லா ஆலயங்களிலும் இவர் காவல் தெய்வமாக உள்ளார். பெரும்பாலும் எல்லா கிராம எல்லையிலும் காவலாக ஆட்சி செய்கிறார்.



# பித்ரு தோஷம் காரியத் தடை நீங்க அருளும்

# காகமுகி யோகினி



ஆன்மீகத்தில் விசித்திரங்க ளுக்குப் பஞ்சமில்லை ! காகத்தின் முகமும், பெண் உடலும் கொண்ட “காக முகி” யோகினி யைப் பற்றித் தெரியுமா?

காகத்திற்குப் பொதுவாகவே இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்றையும் உணரும் ஆற்றல் உண்டு என்பார்கள். அதனால் தான் முன்னோர்கள் வழிபாட்டில் காகத்திற்கு முக்கிய இடம் உண்டு. இந்த காக முகி தேவி, காலத்தின் ரகசியங்களைத் தன்வசம் வைத் திருப்பவள்.

இவள் ஒரு கையில் கபாலமும், மறு கையில் வாளும் ஏந்தி, மிகுந்த கம்பீரத்துடன்காட்சி யளிப்பாள். இவளுடைய பார்வை மிகவும் கூர்மை யானது, நம் மனதில் மறைத்து வைத்திருக்கும் ரகசியங்களை இவள் எளிதில் கண்டுவிடுவாள்.

காகபுசுண்டர் என்ற மகா சித்தர் காக வடிவம் எடுத்து பல யுகங் களைக் கண் டவர் என்பது உங்களுக்குத் தெரியும்.

அந்த காக புசுண்டரின் ஞானமும், அன்னை சக்தியின் ஆற்றலும் இணைந்த வடிவமாகவே இந்த “காக முகி” பார்க்கப்படுகிறாள்.

அன்றைய உணவை அன்றே தேடும் சுதந் திரமான பறவை. இந்த தேவியும் அத்தகைய சுதந்திரத்தையும், தனித்துவத்தையும் அருளு பவள்.

முன்னோர்களின் ஆசி (பித்ரு தோஷம் நீங்க), காரியத் தடை நீங்க மற்றும் வரப்போகும் ஆபத்துகளிலிருந்து தப்பிக்க இந்த தேவியை வழிபடலாம்.

ஒரிசாவின் “ஹிராப்பூர்” வட்ட வடிவ யோகினி கோவிலில் இவளுடைய மிக அழகிய மற்றும் விசித்திரமான சிலையைக் காணலாம்.







# கந்த ஆஸ்ரமம் அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் மஹா கும்பாபிஷேக

கரூர் மாவட்டம், மேலப்பாளையம் கிராமம், எஸ்ஆர்எம் திருமண மண்டபம் கிழக்கில்மாருதி நகரில் அமைந்து உள்ள ஓம் ஸ்ரீ கந்த ஆஸ்ரமம் அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் மஹா கும்பாபிஷேக நடைபெற்றது.

எங்கும் நீக்கமர நிறைந்து அருள்பாலிக்கும் இறைவன் முருகப்பெருமானின் மூன்றாம் படையாகிய பழனி ஸ்ரீ பாலதண்டாயுதபாணி சுவாமிக்கு புதிய ஆலயமாக கரூர் மாவட்டம், கரூர் வட்டம், மேலப்பாளையம் கிராமம், மாருதி நகரில் அருள்மிகு சர்வ வல்லபை கணபதி. அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமி, ஸ்ரீமத் போகர் சித்தர், அருள்மிகு இடும்பன் சுவாமி, அருள்தரும் புவனநாயகி உடனாகிய அருள்மிகு புவனநாதர், அருள்மிகு காலபைரவர். அருள்மிகு நவகிரக சுவாமிகள் அருள்மிகு நாக கன்னிகை சுவாமிகள் அமைக்கப்பட்டு ஆலய திருப்பணிகள் சிற்ப சாஸ்த்திர முறைப்படி செவ்வனே செய்து பஞ்சவர்ணங்கள் தீட்டி சிவாகம முறைப்படி நான்கு கால யாக பூஜைகள் நடைபெற்றது. முன்ன தாக கடந்த 4ந்தேதி

புலியூர் ஸ்ரீ பகவதி அம்மன் கோவிலிலிருந்து தீர்த்தம் குடம் புறப்பாடு நிகழ்ச்சியுடன் சிறப்பு கணபதி ஹோமம் முதல் கால யாக பூஜைகள் தொடங்கி தொடர்ந்து வேதபாராயணங்கள், திருமுறை பாராயாணம் மஹா பூர்ணாஹுதி நடைபெற்றது. மகாகும்பாபிஷேக விழா முன்னிட்டு திருமுருகவள்ளல் வாரியர் சுவாமிகள் மாணவி கலைமாமணி தேச.மங்கையர்க்கரசி அவர்களின் ஆன்மிக சிறப்பு சொற்பொழிவு நடைபெற்றது.

யாகத்தில் வைத்து பூஜை செய்து கடங்கள் புறப்பட்டு கோவில் வலம் வந்து விமான கோபுரம் மற்றும் பரிவார கோபுர கலங்களில் புனித தீர்த்தத்தால் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அதைத் தொடர்ந்து தண்டாயுதபாணி சுவாமிக்கு மகா அபிஷேகம் தீபாராதனை நடந்தது. மஹா கும்பாபிஷேகம் விழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர்.

இதற்கான ஏற்பாடுகளை கரூர் ஓம் ஸ்ரீ சுந்த ஆஸ்ரமம் அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் தேவஸ்தானம் சார்பில் ஸ்தாபகர் நிறுவனத்தலைவர் மடாதிபதி தவதிரு சாந்தானந்த குமர குருபர சுவாமிகள் இளையபட்டம் பிரம்ம ஸ்ரீ தவத்திருDr.லோகானந்த குமர குருபர சுவாமிகள் ஓம் ஸ்ரீ கந்த ஆஸ்ரமம் அருள்மிகு ஸ்ரீ ஞான தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் தேவஸ்தானம் மேலப்பாளையம் சாணம் பிரட்டி கரூர் செய்து இருந்தனர். ஆலய தொடர்புக்கு 9080410861, 9095941903.



# சங்கு ஊதுவதின் காரணமும் அதனால் ஏற்படும் நன்மைகளும்

பகவத் கீதையில், பெரும் போரின் தொடக்கத்தில், கிருஷ்ணர் சங்கு ஊதுவதன் மூலம் இந்த தெய்வீக சடங்கைத் தொடங்கினார் என்று புராணங்கள் கூறுகின்றன.

நம் தமிழ்நாட்டை பொறுத்தவரை நாம் இறந்தவர்களை மயானத்திற்கு எடுத்து செல்லும்போது சங்கு ஊதுவது சகஜம். ஆனால் வட இந்தியாவை பொருத்த வரையில் அவர்கள் காலங்காலமாக சங்கை ஊதித்தான் பூஜையை துவங்கும் வழக்கத்தை கொண்டுள்ளார்கள்.

சங்கு ஊதுவது தூய்மை, தெய்வீகம் மற்றும் தீமையை நன்மை வென்றதாகக் குறிக்கிறது.

பகவான் விஷ்ணுவின் கையில் உள்ள சங்கு, வாழ்க்கையின் சாராம்சத்தையும், ஆதி ஒலியையும் குறிக்கிறது. சங்கு ஊதுவது என்பது, விஷ்ணுவின் சுவாசமான “ஓம்“ என்ற புனித ஒலியுடன் இணைக்கப்பட்ட ஆதி படைப்புக் குரலைக் குறிக்கிறது.

சங்கு மற்றும் அதன் ஊதலின் முக்கியத்துவம் அதன் தூய்மை, ஆதி ஆற்றல், புத்திசாலித்தனம், ஞானம், மங்களகரமான தொடக்கங்கள், தெய்வீகம் மற்றும் தீமைக்கு எதிரான வெற்றி ஆகியவற்றை குறிக்கும் வகையில் உள்ளது.

இது சுற்றுச்சூழலை நேர்மறையாக



சுத்திகரித்து உற்சாகப்படுத்துகிறது. தைரியம், மன உறுதி, உறுதிப்பாடு மற்றும் நம்பிக்கையை மேம்படுத்துகிறது.

எந்தவொரு சடங்கிற்கும் முன்பு மூன்று முறை சங்கு ஊதுவது, எதிர்மறை சக்தியைக் குறைத்து, தமஸ் மற்றும் ரஜஸ் அதிர்வுகளைக் குறைத்து, சத்வ அதிர்வுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

சங்கு ஊதுவது சுப நிகழ்வுகளுக்கு முன் தீய எண்ணங்கள் மற்றும் செயல்களை அகற்றுவதைக் குறிக்கிறது. சங்கு ஊதுவதன் மற்றொரு நோக்கம் என்னவென்றால், அது எதிர்மறை சத்தங்களை மறைத்து நல்ல ஒலிகளை உருவாக்கி, வழிபாட்டிற்கான அமைதியான சூழ்நிலையை உண்டாக்கும். மக்கள் தங்கள் அன்றாட வேலைகளுக்கு மத்தியிலும், தெய்வீக இருப்பை இடைநிறுத்தி கொள்ள இது ஒரு நினைவூட்டலாக செயல்படுகிறது.

இதைத் தவிர சங்கு ஊதுவதால் பல உடல் ரீதியான ஆரோக்கியமும் நமக்கு கிடைக்கின்றன. சங்கு ஊதும் போது அது நம் மூச்சை சீராக்குவதோடு மட்டுமல்லாமல் நம் நுரையீரலின் செயல்பாட்டுக்கும் உதவுகிறது.

மேலும் சங்கு கிருமிகளை அழிக்கும் தன்மை கொண்டது. சங்கினுள் சென்று வெளியாகும் காற்று கிருமிகளை அழிக்கின்றது. இதனால்தான் சில வீடுகளில் சங்கை வாசலில் மாட்டி வைப்பார்கள். மேலும் கோயில்களில் தீர்த்தத்தில் சங்கை போட்டு வைப்பார்கள். இது நீரில் இருக்கும் கிருமிகளையும் அழித்து விடும்.

சங்கில் இரவு முழுவதும் வைத்திருக்கும் தண்ணீரைக் குடிப்பதன் மூலமாக மஞ்சள் காமாலை, சரும நோய்கள், எலும்புகள், பற்கள், வயிற்றுப் பிரச்சினைகள் போன்ற பல நோய்கள் தீர்க்கப்படுகின்றன. இதில் கால்சியம், பாஸ்பரஸ், மெக்னீசியம் மற்றும் சல்பர் உள்ளன.

நீங்கள் சங்கு ஊதும் போது, உங்கள் நுரையீரலின் தசைகள் விரிவடைந்து, அவற்றின் காற்றோட்டத்தின் திறனை மேம்படுத்துகின்றன.

சங்கு ஊதுதல் உங்கள் குரல்வளைகளுக்கு ஒரு சிறந்த பயிற்சியாக உள்ளது. இதனால் உங்களின் பேச்சு சிக்கல்களை சரிசெய்யவும் இது உதவுகிறது.

நீங்கள் இத்தகைய அற்புதம் நிறைந்த சங்கை ஊத விரும்பினால் தேர்ச்சி பெற்ற நபரிடமிருந்து சங்கு ஊதுவதற்கான கலையை கற்றுக் கொண்டு பிறகு முயற்சிப்பது தான் நல்லது.


ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!
Free e-book

Scan to Read
AANMEEGAMALAR
Website

# தர்ப்பணம் செய்யும் முன் கடைபிடிக்க வேண்டிய 33 முக்கிய விஷயங்கள்

- தர்ப்பணம் செய்யும் நபர் தர்ப்பணம் செய்யும் முன்பாக அந்த மாதத்தில் மற்ற இடங்களில் நடைபெறும் எந்த ஒரு பூஜைகளிலும் ஹோமங்களிலும், ஆலய நிகழ்ச்சிகளிலும் தனது பெயர் சொல்லி சங்கல்பம் செய்து கொள்ளக்கூடாது.
- பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்ய வேண்டிய நாளன்று, பித்ருக்களுக்குதர்ப்பணம்செய்து மூடிக்கும் வரை, வீட்டில் தெய்வ சம்பந்த மான பூஜைகளை நிறுத்தி வைத்துவிட்டு பித்ருக்களுக்குதர்ப்பணம் செய்து முடிந்த பின்னர் தினசரி செய்ய வேண்டியதெய்வ சம்பந்தமான பூஜைகளைச் செய்யவேண்டும்.
- சூரியனும், சந்திரனும் ஒன்றாக இணைந் திருக்கும் நாளான அமாவாசை அன்று பித்ருக்களுக்கு பசியும் தாகமும் அதிகமாக ஏற்படும் என்று தர்ம சாஸ்திரங்கள் கூறுகின் றன.
- அமாவாசை திதியன்று ஒவ்வொரு வீட்டு வாசலிலும் அந்தந்த வீட்டு பித்ருக்கள் வந்து நின்று கொண்டு தங்களுக்குத் தரப்படும் எள் கலந்த தண்ணீரை பெற்றுக் கொள்வதற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நம்பப்படுகிறது. அன்றைய தினம் வீட்டில் தர்ப்பணம் செய்து அவர்களுக்கு எள் கலந்த தண்ணீரை தரப்படவில்லை என்றால் அவர்கள் ஏமாற்றமடைந்து வருத்தப்பட்டு கோபத்தோடு செல்கிறார்கள் என்றும், ஒரு சில பித்ருக்கள் சாபம் கூட தந்து விட்டுச் செல்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.
- ஒரு வருடத்தில் பித்ருக்களுக்குதர்ப்பணம் செய்ய வேண்டிய நாட்கள் மொத்தம் தொன் னூற்று ஆறு நாட்கள். இவைகளில் 14 மன்வாதி நாட்கள், யுகாதி நாட்கள் 4, மாதப்பிறப்பு நாட்கள் 12, அமாவாசை 12, மகாளய பட்சம் 16, வ்யதீபாதம் 12, வைத்ருதி 12, அஷ்டகா 4, அன்வஷ்டகா 4, பூர்வேத்யு 4 நாட்கள். இந்த நாட்களில் செய்யப்படும் தர்ப்பணத்தால் பித்ருக்கள்



மிகவும் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

- ஒருவன் தனது தாய் தந்தைக்கு சிரார்த்தம் செய்யாமல் எனக்குச் செய்யும் பூஜைகளை நான் ஏற்றுக் கொள்வதில்லை என விஷ்ணுவும் சிவனும் கூறியுள்ளனர்.
- நமது பித்ருக்களிடத்தில் சிரார்த்தத்தை சிரத்தையுடன் செய்வதாகவும், நல்ல உயர்ந்த ஆடை, தீர்த்த பாத்திரம் சிரார்த்தத்தில்வாங்கித் தருவதாகவும், பிரார்த்தனை செய்து கொண்டு அவ்வாறே சிரார்த்தத்தைநடத்தினால் நிச்சயம் உங்கள் விருப்பம் நிறைவேறும். விரும்பிய பலன் கைகூடும்.
- ஒரே நாளில் ஏராளமான பித்ருக்களுக்கு தனித்தனியாக பல பேர் சிராத்தம் செய்யும் போது சிரார்த்த உணவு அவரவர்களின் பித்ருக்களுக்குஎவ்வாறு சரியான முறையில் சென்றடைகிறது என்ற சந்தேகம் சிலருக்கு ஏற்படும். இதை கருத்தில் கொண்டுதான் மறைந்த முன்னோர்களின் கோத்ரத்தையும் பெயரையும் தர்ப்பணம் செய்யும்போது சொல்கிறார்கள். இதனால் ஒருவர் கொடுக்கும் தர்ப்பணம் அவரவர்களுக்கு சரியாக சென்றடையும்.
- மகாளயபட்சம் 15 நாட்களும் பித்ருகளுக்கு தாகமும், பசியும் மிக அதிகமாக இருக்கும். அதனால் அவர்கள் அருளைப் பெற வேண்டும். அந்த 15 நாட்களில் உறவினர்கள் இறந்து விட்டால் நாம் சிரார்த்தம் செய்ய வேண்டாம் என்று சாஸ்திரம் கூறுகிறது. ஆனால் பிறகு கட்டாயமாகச் செய்ய வேண்டும்.
- பித்ரு வர்க்கம், மாத்ரு வர்க்கம் பித்ரு காருணீக வர்க்கம் என்று பித்ருக்கள் மூன்று வகைப் படுத்தப்பட்டுள்ளார்கள். அதாவது அப்பா வகையை சார்ந்த பித்ருக்கள் பித்ருவர்க்கம் எனப்படுவார்கள். அம்மா வகையை சார்ந்த பித்ருக்கள் மாத்ருவர்க்கம் எனப்படுவார்கள்.சித்தப்பா, மாமா, குரு, நண்பர்கள் காருணீகவர்க்கம் எனப்படுவார்கள். இவர்களை நினைவு கூறி தர்ப்பணங்களை செய்ய வேண்டும்.
- நமக்காக எத்தனையோ கஷ்டங்களை தாங்கிய நம் பித்ருக்களுக்கு, மகாளபட்சம், அமாவாசை போன்ற நாட்களில் வெங்காயம், பூண்டு, வாசனை திரவியங்கள் போன்றவை வேண்டாம்.
- சாஸ்திரப்படி, சிரார்த்த காரியங்கள்செய்பவர் திருமணம் உள்ளிட்ட விழாக் களிலும் மற்றவர் வீடுகளில் உணவு, உண்ணக்கூடாது.
- துவாதசி பன்னிரெண்டாம் நாளன்று பித்ரு பூஜை செய்பவன் சொர்ண லாபம் பெறுவான்.
- தாய், தந்தையின் இறந்த திதிகளை மட்டும் நினைவு கொண்டு தர்ப்பண காரியங்கள் செய்தால் போதும் எனும் பழக்கம் இன்று பலரிடத்தில் ஏற்பட்டுள்ளது. குடும்பத்தில் இறந்த முன்னோர்கள் அனைவரையும் நினைவு கூர்ந்து தர்ப்பண காரியங்கள் செய்ய வேண்டும். அதுதான் சிறப்பானது. முழு பலன்களையும் தர வல்லது.
- குடும்பத்தில் சன்னியாசம் வாங்கிச் சென்றவர்களுக்கு துவாதசி அன்று மகாளய சிரார்த்தம் செய்வது மிக முக்கியம்.
- கோவில்கள், குளங்கள், கடல் போன்ற இடங்களில்



செய்யப்படும் தர்ப்பணங்களுக்கு மிக அதிகமான சக்தி உண்டு.

- திருவாலங்காடு, திருவள்ளூர், ராமேஸ்வரம், திருமயம் அடுத்து வரும் அரண்மனைப்பட்டி, திருவண்ணாமலை, திருவிடைமருதூர், காசி, திருநள்ளாறு ஆகிய இடங்களில் தர்ப்பணம் செய்வது மிக சிறந்தது.
- திலதர்ப்பணபுரி எனும் ஊரில் (திருவாரூர்பூந் தோட்டம் இடையில் உள்ளது) தர்ப்பணம் செய்வது மிக, மிக விசேஷமாக கருதப்படு கிறது. இங்கு ஸ்ரீராமரும் லட்சுமணரும் தம் தந்தையான தசரத மகாராஜாவிற்கு



தர்ப்பணம் செய்தனர் என்பது குறிப்பிடத்தக் கது.

- மகாளய அமாவாசையில் பித்ருக்களை வழிபடாவிட்டால் திருமண தடை, குழந்தை பாக்கியம் இல்லாமை, நோய், வறுமை போன்றவை ஏற்படக்கூடும் என்று கருடபுராணம் கூறியுள்ளது.
- பூசணிக்காய்க்குள் அசுரன் இருப்பதாக ஐதீகம் உள்ளது. எனவே பித்ரு பூஜை செய்யும்போது பூசணிக்காயை தானமாகக் கொடுத்தால், அசுரன் நம்மை விட்டு போய் விடுவான் என்று கருதப்படுகிறது.
- தற்கொலை செய்பவர்களின் ஆத்மாக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கலாம். அவர்களுக்குரிய தர்ப்பணம் செய்யும்போது அந்த ஆத்மாக்கள் விஷ்ணுவின் ஆசியை பெற வழிவகை ஏற்படும்.
- மகாளய அமாவாசை தினத்தன்று மறைந்த முன்னோர்களின் படங்களுக்கு துளசி மாலை அணிவிப்பது நல்லது.
- மகாளய அமாவாசை தினத்தன்று பசுவுக்கு கீரை கொடுத்தால், அது மறைந்த உங்கள் தாத்தாவுக்கு தாத்தாவுக்கும் (அவர்கள் மறுபிறவி எடுத்திருந்தாலும்) போய் உரிய பலன்களை கொடுக்கும்.
- மகாளய அமாவாசை நாட்களில் எக்காரணம் கொண்டும் மறைந்த முன்னோர்களை திட்டவோ, விமர்சனம் செய்யவோ கூடாது.
- மகாளய அமாவாசை நாட்களில் மோட்சதீபம் ஏற்றி வழிபட்டால் பித்ருக்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.
- ஞாயிறு, செவ்வாய், வெள்ளிக்கிழமைகள் மற்றும் ஜென்ம நட்சத்திரத்தில் தர்ப்பணம் செய்ய வேண்டியதிருந்தால் எள்ளுடன் அட்சதையையும் சேர்த்துக் கொள்ள வேண் டும்.
- தர்ப்பணத்தை எப்போதும் கிழக்கு முகமாக பார்த்தபடி தான் கொடுக்க வேண்டும்.
- மகாளய பட்சத்தின் 15 நாட்களும் அன்ன தானம், புதிய உடை தானம் செய்வது மிக, மிக நல்லது.
- தர்ப்பணத்தில் பயன்படுத்தும் தர்பணப்புல் கேது கிரகத்துக்கு உரியதாகும். தர்ப் பைக்கு நாம் எந்த அளவுக்கு மரியாதை கொடுக்கிறோமோ, அந்த அளவுக்கு அது கேதுபகவான் மூலம் பலன்களை பெற்றுத் தரும். குறிப்பாக பெரியவர்களின் தொடர்பு கிடைக்கும்.
- பசு மாடுகள் கட்டப்பட்ட தொழுவத்தில் இருந்தபடி சிரார்த்தம் செய்வது அளவற்ற பலன்களைத் தரும்.
- தர்ப்பணம் மற்றும் சிரார்த்தம் நடைபெறும் நாட்களில் அவை முடியும் வரையில் அதைச் செய்பவர் பால், காபி முதலிய எதையும் சாப்பிடக் கூடாது.
- முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்த நீரை மற்றவர் கால்களில் மிதிக்கும்படி கொட் டக்கூடாது.
- மகாளய அமாவாசை தினத்தன்று புனித நதிகளில் நீராடுவது நல்லது. அப்போது இரு கைகளாலும் நதி நீரை எடுத்து விடுவது (அர்க்கியம் செய்வது) மிகுந்த நன்மையைத் தரும். சூரியனை பார்த்தபடி 3 தடவை நீர் விடுதல் வேண்டும்.

# இராமருக்கு காட்சி கொடுத்த
# பிரசன்ன வெங்கடேசர்

காக்கும் கடவுளாம் கருணாமூர்த்தியான கோவிந்தன், நினைத்த மாத்திரத்தில் நினைத்த இடத்தில் நினைத்தவண்ணம் தோன்றி,அருள வல்லவர். அப்படியாக அச்சுதன், சோழமண்ணில் எழுந்தருளும் திருப்பதிகள் பல உள்ளன.

அதில் ஆழ்வார்கள் நேரடியாக சென்று பாசுரங்கள் பாடியருளிய திருத்தலங்கள் போக, வைப்புத்தலமாக, அபிமான க்ஷேத்திரங்களாக எண்ணற்ற விஷ்ணு கிரகங்களை பாடியுள்ளனர்.

அவற்றுள் தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தாலுகாவில் உள்ள வேப்பத்தூரும் ஒன்றா கும். முன்பு இத்தலம் நீம்பபுரம் என்று அழைக்கப்பட் டுள்ளது. திருமங்கையாழ்வார் இப்பதியை நிம்ம புரம் என்று குறிப்பிட்டுள்ளார். இப்பதியை ரிஷி திருப்பதி என்றும் போற்றுவர் பெருமாள் பக்தர்கள்.

சோழர் காலத்தில் “சதுர்வேதிமங்கலம்“ என்று அழைக்கப்பட்ட இந்த வேப்பத்தூர்ஆலயங்கள் நிறைந்த க்ஷேத்திரமாகும். நான்கு அக்ரஹாரங் களுடன் சுமார் 300 வைதீக பிராமண குடும்பங் களை, குறிப்பாக நான்கு வேதங்களைகற்றுணர்ந்த ‘சதுர்வேதி’ என்றுகௌரவ பட்டத்தைப்பெற்ற மாமனிதர்களையும், மஹான்களையும், பண்டிதர் களையும் பெற்று மாபெரும்க்ஷேத் திரமாகத் திகழ்ந்துள்ளது. தற்பொழு தும் திகழ்ந்து வருகிறது.

த்ரேதாயுகத்தில் ஸ்ரீராமபிரான் வனவாசம் செய்யும்போது மாய மாரீசனைக் கொன்று கலைத்து நிற்கும்போது, திருவேங்கடம்விட்டு இந்த வேப்பத்தூரில் ஸ்ரீதேவி பூதேவியுடன் ஸ்ரீ வெங்கடாஜலபதி பிரசன்னம் (காட்சி கொடுத்தல்) ஆகியுள்ளார். அதுமுதல் நின்ற கோலத்தில் ஸ்ரீதேவி பூதேவியருடன் ஸ்ரீ பிரசன்ன வெங்க டேசப் பெருமாளாக சேவை சாதித்து வருகின்றார்.

துவாபரயுகத்தில் ஸ்ரீ கிருஷ்ணனாக அகத்திய மாமுனிவருக்கு மந்திர உபதேசம் செய்துள்ளார். குபேரன் வழிபட்ட திருமால் ஆலயங்களில் ஒன்றாகவும் திகழ்கிறது. ஸ்ரீதரஐயாவாள், ஸ்ரீ போதேந்திராள் மற்றும் மகா பெரியவாள் போன்ற மகான்கள் வழிபடப்பெற்ற பெருமையுடையவர் இந்த பிரசன்ன வெங்கடேசர்.

இவ்வூரின் மற்றொரு வைஷ்ணவத் தல மாக சுமார் 60 அடி உயர பல்லவர் கால செங் கற்தளியில் வீற்றிருந்த பெருமாள் தனது இரு தேவியர்களையும் இரு பக்கங்களில் அமர்த்திய படியான நிலையில் கம்பீரமாக காட்சி தருகின்றார். தற்போது பாலாலயத்தில் உள்ளது மூர்த்தங்கள். தொல்பொருள்துறை கட்டுப் பாட்டில் உள்ள இவ்வாலய



e-magazine
aanmeegamalar.com





கருட பகவான், தாசானு பாவத்தில் பெருமாள் முன்பு அமர்ந்த நிலையில் வேறெங்கும் காணக் கிடைக்காத ஆபூர்வ கோலத்தில் எழுந்தருளு கின்றார்.

ஊரின் மேற்குப் பகுதியில் அக்ரஹாரத்தின் முடிவில் ஆலயம் அழகுற அமைந்துள்ளது. ஐந்து கலசங்களுடன் முன்புற கோபுரம் சிறிய வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. உள்ளே சென்றதும் நேராக மேற்கு நோக்கியபடி அஞ்சலியஸ்தராய் ஹரியை வணங்கியபடி அருள்பாலிக்கின்றார் ஸ்ரீ கருடாழ்வார். திறந்தவெளி முன்மண்டபம் அழ கிய தூண்கள் கொண்டு திகழ்கிறது.

அதன் தென்புறம் தும்பிக்கையாழ்வார் அருள் செய்கின்றார். வடபுறம் நாகராஜர்வீற்றருள்கின்றார். இரண்டாம் வாயிலுக்குள் செல்ல...மகாண்டபம் மூடுதலமாக, வவ்வால் நெத்தி மண்டபமாக வண்ண ஓவியங்களுடன் காணப்படுகின்றது. இடதுபுறம் அகத்தியர் சிறிய வடிவிலும், அர்ஜுனர் மற்றும் ஸ்ரீ கிருஷ்ணர் அற்புத சிற்ப வடிவோடும் காட்சியளிக்கின்றனர். அர்த்த மண்டபத்தில் தேவியர்களுடன் சேவை புரிகின்றார் ஸ்ரீனி வாசர். இங்கே பாமா ருக்மணி சமேத ஸ்ரீ காளிங்க நர்த்தனரும் அருளாட்சி செய்கின்றார்.

மூலஸ்தானத்தில் மணிமுடி சூடி, பாஞ் சசானியமும், சக்ராயுதமும் மேலிரு கரங்களில் தாங்கி, கீழ் இடது கரத்தை இடுப்பில் மடித்து, வலதுகரத்தை தனது பாதகமலமே தன் பக்தனுக்கு சரணாகதி என காட்டியபடி, தண்டத்தின் மீது ஒய்யாரமாய் கையை ஊன்றி, குருவால் இடுப்பி னில் சொருகியவண்ணம் வக்ஷஸ்தலம் என்னும் மார்பினில் ஸ்ரீ என்னும் லக்ஷ்மிதேவியை அமர்த்தி, அலைமகளையும் நிலமகளையும் தனக்கு இரு பக்கங்களிலும் நிலைநிறுத்திக்கொண்டு தேன் சிந்தும் திருமுகத்துடன் திவ்ய வடிவினில் பக்தனது மனதை திக்கு முக்காடச்செய்கின்றார் திருவேங்கடமுடையான்.

ஸ்ரீ பிரசன்ன வெங்கடேசன் என்னும் திருநாமம் கொண்டு சேவை புரிந்து வருகின்றார். ஆஹா.... அடடா....எத்தனை அழகு. எப்பேர்பட்ட தரிசனம். மனம் குளிர தரிசித்த பின்னர், ஆலய வலம் வருகின்றோம். ஒரே திருச்சுற்றுடன் திகழ்கிறது இவ்வாலயம். தாயாருக்கென தனி சன்னதி ஏதும் இல்லை. கருவறை விமானமாக ஆனந்த விமானம் திகழ்கின்றது. வடபாகத்தில் கிணறு ஒன்று காணப்படுகிறது.

ஈசான பாகத்தில் மேற்கு முகம் கொண்டு அதியற்புதமாக திருவருள் புரிகின்றார் சிறிய திருவடிகளான ஸ்ரீ ஹனுமன். இவர் குழந்தை வடிவில் ஸ்ரீ பால ஆஞ்சநேயர் என்னும் திருநாமம் கொண்டு அருள்பாலிக்கின்றார். உடன் உற்சவ மூர்த்தியும் உள்ளது. தென்கிழக்கில் மடப்பள்ளி அமைந்துள்ளது. மிகவும் தூய்மையாக விளங்கு கின்றது ஆலயம். இவ்வாலயத்தின் அருகே ஸ்ரீ மகா பெரியவாளின் பாதக ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சித்திரை வருடப்பிறப்பன்று பஞ்சாங்கம் வாசித்தல், புரட்டாசி சனிக்கிழமைகளில்முதல் வாரம் சேஷ வாகனத்திலும், இரண்டாம் வாரம்



அனுமன் வாகனத்திலும், மூன்றாம்சனியன்று கருட வாகனத்திலும், நான்காம் சனிக்கிழமையில் குதிரை வாகனத்திலும் புறப்பாடுகள் நடத்தப்படும்.

நவராத்திரி இங்கு விசேஷமாக கொண்டாடப் படுகின்றது. தினமும் காலை பெருமாள் மற்றும் தாயாருக்கு திருமஞ்சனம் நடக்கிறது. உற்ச வருக்கு மாலை விசேஷ அலங்காரம் உண்டு.

முதல் நாள் வைகுண்ட தரிசனம், இரண்டாம் நாள் அனந்த சேவை, மூன்றாம் நாள் வெண் ணெய்த்தாழி கிருஷ்ணர், நான்காம் நாள் வேணு கோபாலர், ஐந்தாம் நாள் உரல் கண்ணன், ஆறாம் நாள் கோதண்டராமர், ஏழாம் நாள் பார்த்த சாரதி, எட்டாம் நாள் திருக்கல்யாண உற்சவம், ஒன்பதாம் நாள் சரஸ்வதி அலங்காரம் ஆகியவை செய்யப்படுகின்றன.

பத்தாம் நாள் விஜயதசமியன்று அம்பு போடும் நிகழ்ச்சியும், பெருமாள் குதிரை வாகனத் தில் திருவீதி உலா வருதலும் சிறப்புடன் நடத்தப் படு கின்றன.

கார்த்திகை மாதம் முழுவதும் மாலையில் சகஸ்ர தீப அலங்கார சேவையும், அன்னதானமும் நடைபெறுகின்றது. வைகுண்ட ஏகாதேசியன்று விசேஷத் திருமஞ்சனமும், கருடவாகன புறப் பாடும், பின் மறுநாள் துவாதசியன்று பல்லக்கில் வெண்ணெய்த்தாழி அலங்காரத்தில் வீதியுலாவும் நடந்திடும்.

அனுமன் ஜெயந்திக்கு முன்னாள் பால ஆஞ்சநேயருக்கு ஏகதின லக்ஷார்ச் சனையும், மறுநாள் 10,008 வடமாலை சாற்றுபடியும், அன்று மாலை அனுமன் வீதி உலாவும் நடக்கிறது. மாலை வீதி உலாவின்போது வடை பிரசாதம் பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது.

மாதந்தோறும் பௌர்ணமியில் ஸ்ரீ சத்யநாரா யண பூஜையும், அன்ன தானமும் சிறப்புற நடத்தப்படுகிறது.

மாதத்தின் முதல் புதன்கிழமை, வளர் பிறை மற்றும் தேய்பிறை ஏகாதசியில் மூலவருக்கு திரு மஞ்னம் நடைபெறுகின்றது. ஒவ்வொரு மாத திரு வோணத்தன்று காலை திருமஞ்சனமும், மாலை தீப சேவையும் அனுசரிக்கப்படுகின்றன.

பிரதி வளர்பிறை தேய்பிறை பஞ்சமி மற்றும் சுவாதி நட்சத்திரநாளில் கருடனுக்குதிருமஞ்சனம் செய்விக்கப்படுகின்றது. பிரதி மாத மூலநட்சத்திரம் மற்றும் அமாவாசையில் அனுமனுக்கு திருமஞ் சனம் நடைபெறுகின்றன. அதோடு, அக்ஷய திருதியை, கருட சேவை, கோகுலாஷ்டமி, ஆடிப் பூரம், ஸ்ரீராமநவமி போன்றவைகளும் இங்கு விமர்சியாக அனுஷ்டிக்கப்படுகின்றன.

புரட்டாசி மாதத்தில் விஷ்ணு பக்தர்கள் மாவிளக்கு ஏற்றி பிரார்த்தனை செய்கின்றனர். புதன்கிழமைகளில் பச்சரிசி மீது உடைத்த தேங் காயில் நெய்தீபம் ஏற்றி, திருமணம் மற்றும் புதன் பரிகாரங்களுக்காக வேண்டிக் கொள்கின்றனர்.

பௌர்ணமியன்று நடைபெறும் சத்யநாராயண பூஜையில் கலந்துகொண்டு அதில் பூஜித்துத் தரப்படும் மட்டை தேங்காயை வீட்டிற்கு எடுத்துச் சென்று அவர்களது கோரிக்கை நிறைவேறியதும், மீண்டும் கோவிலுக்கு வந்து, ஒரு படி பச்சரிசி மற்றும் தக்ஷணையுடன் அந்த மட்ட தேங்காயை திரும்பத்தர வேண்டும்.

பால ஆஞ்சநேயருக்கு வியாழக்கிழமைகளில் வெற்றிலை மாலை சாற்றி வழிபட திருமண வரம் போன்ற முக்கிய வரங்கள் கிடைக்கப்பெறுகின்றன. சனிக்கிழமைகளில் பெருமாளுக்கு அர்ச்சனை செய்தும், அனுமனுக்கு வெற்றிலை மாலை சாற்றி யும் வழிபட, கல்வி, ஆரோக்கியம், காரிய சித்தி ஆகியன கைகூடுகின்றன.

தல விருக்ஷமாக வேப்பமரமும், தல தீர்த்தமாக சந்திர புஷ்கரணியும் திகழ்கின்றது. தினமும் காலை 7 மணி முதல் 10 மணி வரையும், நாளை 6 மணி முதல் 8 மணி வரையும் ஆலய நடை திறந்திருக்கும்.

வழி: தஞ்சை மாவட்டம், திருவிடை மருதூரி லிருந்து 3 கிலோமீட்டர் தொலைவிலும், கும்ப கோணத்திலி ருந்து பூம்புகார் செல்லும் சாலையில் 10 கிலோமீட்டர் தொலைவிலும் அமைந் துள்ளது வேப்பத்தூர்.



– பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்புக்கு: 9789156179.

கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்
ஒரே கிளிக் 195 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# சிவனை மறந்த பாண்டவர்கள் நினைக்கவைத்த கண்ணன்



மகாபாரதத்தில் ஒரு கதை உண்டு, சிவனிடம் இருந்து பாசுபத அஸ்திரம் அர்ஜூனன் பெற்று வந்தாலும் அவன் அதை பயன்படுத்தாமலே யுத்தம் முடிந்தது.

கண்ணன் அவர்களின் கண்கண்ட தெய்வ மானான், வேறு எதுவும் நினைவில் இல்லை, சிவன் கொடுத்த ஆயுதமுமில்லை செய்த கடும் தவத்தின் நினைவுமில்லை, அது போக யுத்தம் முடிந்த வெற்றியில் இருந்தார்கள்.

இந்த போரும் வெற்றியும் மிகபெரிய பரம் பொருளின் நாடகம் என அவர்கள் எதையும் நினைக்கவில்லை, சிவனை அடியோடு மறந்திருந் தார்கள்.

யுத்தத்தில் துரியனை அடித்து கொன்று அதை முடித்துவைத்தவன் என பீமனும் ஒரு கர்வத் தோடு அலைந்தான், காட்சிகளை கவனித்து கொண்டிருந்த கண்ணன் அவர்களின் மாயை அறுக்க ஒரு நாடகம் நடத்தினான்.

யுத்தம் என்பது பாவங்களின் முடிவு, அதற்கு யாரும் தப்ப முடியாது, செய்த பாவங்களுக்கு பரிகாரமாக ஒரு யாகம் நடத்த நினைக்கும் தர்ம னிடமும் அகங்காரம் மிகுந்தது, இதுவரை யாரும் கொடுக்காத பொருளை கொண்டு யாகம் நடத்த விரும்பினான்.

அங்கேதான் தன் விளையாட்டை ஆரம்பித் தான் கண்ணன், அவனி விளையாட்டு அந்தணர் கள் உருவில் வந்தது.

தர்மனிடம் யாகம் செய்ய வந்த அந்தணர்கள் யாரும் இதுவரை பயன்படுத்தாத யாக பொருள் புருஷ மிருகத்தின் பால் என்றார்கள், மானிட உருவும் சிங்க உடலும் கொண்ட புருஷா மிருகத் தின் பால் அபூர்வமானது என சொல்ல அதை கொண்டுவர விரும்பினான், ஆனால் அந்த கொடிய மிருகம் பற்றி தகவலேதும் அவனிடம் இல்லை அதை தொடர்ந்து காட்சிக்கு வந்தான் கண்ணன்.

அந்த புருஷா மிருகம் பற்றி தனக்கு தெரியும் என்றும் ஆனால் அது பொல்லாதது என்றும் கோபாலன் பெயரை சொன்னால் ஓடும் ஆனால் சிவன் பெயரை சொன்னால் அப்படியே உருகி நிற்கும், அந்நேரம் பாலை கறக்கலாம் ஆனால் சிறிது நேரத்தில் விரட்டும் என்றும் அதன் இயல்பை சொன்ன கண்ணன் ஒரு உத்தியும் சொன்னான்.

12 ருத்திராட்சங்களை பீமனிடம் கொடுப்போம், அவன் நாழிக்கு ஒன்றாக இரவு முழுக்க அதை

e-magazine
aanmeegamalar.com



கொண்டு அந்த மிருகத்தை ஓடவைத்து நிறுத்தி பால்கறக்கட்டும் என 12 ருத்திராட்சங்களை கொடுத்து பீமனை அனுப்ப சொன்னான்.

ஆம், அகபாவத்தில் இருந்த பீமனின் கர்வம் ஒழிக்க அவனையே கிளம்ப சொன்னான் கண்ணன். அந்த ருத்திராட்சத்தை தரையில் வைத்தால் அது லிங்கமாகிவிடும், அதை கண்டு உருகும் மிருகம் அப்படியே பூஜை செய்யும் அப்பொழுது பால்கறக்கலாம் ஆனால் பூஜை முடியும் பொழுது புருஷமிருகம் சீறும் என சொல்லியும் அனுப்பினான் கண்ணன்.

அன்று மகா சிவராத்திரி நாளாய் இருந்தது, கண்ணனின் கணக்கு அதில் சரியாய் இருந்தது.

பீமன் காட்டுக்குள் சென்று கோபாலா கோபாலா என்றதும் அந்த மிருகம் விரட்டியது பீமன் ஒரு ருத்திராட்சம் வைக்க அது லிங்கமாகும் கொஞ்சநேரம் மெய்மறக்கும் மிருகத்திடம் பீமன் பால் எடுப்பான் பின் அவன் கோபாலா கோபாலா என ஓட மிருகம் விரட்டும்.

இப்படி 12 ருத்திராட்சங்களும் லிங்கமாகி பீமன் தப்பியபின்னும் மிருகம் அவனை விரட்டி யது அடுத்து ருத்திராட்சம் இல்லா பீமன் யாக சாலையினை நெருங்கியிருந்தான், அது விடியும் பொழுதாய் இருந்தது காலை 6 மணி ஆகியிருந் தது.

ஆனாலும் மிருகம் விரட்ட யாக சாலைக்குள் ஒரு காலை அவன் வைத்த நிலையில் இன்னொரு காலை மிருகம் பற்றியது.

இப்பொழுது யாகசாலைக்குள் இருக்கும் கால் அவனுக்கு, வெளியில் தான் பிடித்த கால் தனக்கு என அது வாதிட்டது, அங்கு வந்தான் தர்மன்.

ஏ மிருகமே 12 சிவலிங்கத்தை உனக்கு காட்ட ஒடிய புண்ணிய பாதத்தையா கடித்து விழுங்கபார்க்கின்றாய் என உருக்கமாக அவன் கேட்கவும் மிருகத்துக்கு தன் தவறு விளங்கிற்று.

அய்யய்யோ ஆமாம், லிங்கத்தரிசனம் காட்டிய புண்ணிய காலையா கடித்தேன் என அவனை விடுவித்த மிருகம். பின் ஏன் அவன் கோபாலா கோபாலா என கத்தினான் என்பதை யோசித்து சொன்னது. கோபாலா கோபாலா என இவன் அழைத்து ஓடினாலும் அவன் ருத்திராட்சம் வைத்தவுடன் சிவலிங்கம் வந்ததென்றால் “ஹரியும் சிவனும் ஒன்றல்லவா”

அந்த வார்த்தை தர்மனுக்கும் பீமனுக்கும் சுட்டது, அதுவரை குழம்பியிருந்த அவர்கள் இரண்டும் ஒரே சக்தி என்பதை உணர்ந்து அகந்தை ஒழிந்து நின்றனர்.

இரவெல்லாம் ஓடி அரியும் சிவனும் ஒன்று என பீமன் ஞானம் பெற்ற கதை இப்படி உண்டு, அதை நினைவு கூறும் விதமாக முன்பு சிவராத்திரியில் 12 சிவாலங்களுக்கு ஓடும் நிகழ்ச்சியும் இருந்தது

புராணகதை இப்படி இருந்தாலும் 12 லிங்கம் என்படு 12 ராசிகளை குறிப்பது என்றும், எல்லா ராசிகளின் அருளும் அந்நாளி கிடைக்க 12 லிங்கங்களை வணங்க வேண்டும் என்பதும் ஏற்பாடு என்பார்கள்

(உண்மையில் 12 ஜோதிலிங்கம் எனும் முக்கிய லிங்கமும் ஆலயங்களும் இந்த 12 ராசிகளை குறிப்பதே, 12 லிங்கங்களையும் வணங்கினால்





இந்த பிரபஞ்சத்தை 360 பாகை கோணம் சுற்றி யது போலாகும் என்பது ஐதீகம் )

இன்னும் அழுத்தமாக சொன்னால் சிவராத்திரி இரவில் தூங்காமல் லிங்க தரிசனம் செய்ய இந்த ஏற்பாடு செய்யபட்டிருந்தது. அதில் ஹரியும் சிவனும் ஒன்று எனும் மாபெரும் தத்துவமும் இருந்தது


இதனை பாரதத்தின் பல பாகத்தில் வாழ்ந்த இந்துக்கள் ஒரு காலத்தில் செய்தனர், சிவராத்திரி அன்று "கோபாலா கோபாலா" என கத்திய படியே 12 லிங்கங்கள் இருக்கும் ஆலயத்துக்கு ஓடுவார்கள்

இதனை பல இனங்கள் பின்னாளில் கை விட்டது, அதற்கு புத்தமத எழுச்சி பின் சமண மதம் அதை தாண்டிய ஆப்கானியர் ஐரோப்பியர் குழப்பம் என பல காரணம் உண்டென்றாலும் அந்நியர் ஆட்சியில் அதிகம் சிக்காத கன்னியா குமரி பக்கம் இந்த ஓட்டம் உண்டு.

சாலிய மகரிஷி வழிவந்தவர்கள் என தங்களை சொல்லும் சாலியர் இனம் எனும் நெசவாளர் இனம் அதனை தொடர்ந்தது


சிவராத்திரி அன்று இப்படி ஆதி கேசவ பெருமாள் கோவிலை சுற்றிய 12 சிவாலயங்களை இப்படி சிவராத்திரியன்று கோபாலா கோபாலா என சொல்லியபடியே ஓடி சுற்றுவார்கள்.

இது சிவாலய ஓட்டம் என்றாயிற்று இப்பொழுது சாலியர் தாண்டி எல்லா இந்துக்களும் பங்கெடுக்கும் நிகழ்வாக அது அமைந்திருக்கின்றது, ஆம் இந்தியா முழுக்க சிவராத்திரி கொண்டாடபடும் நேரம் கன்னியாகுமரி பக்கம் மட்டும் "கோபாலா கோபாலா" என கண்ணனை நினைத்தபடியே சிவராத் திரி அனுசரிக்க படுகிறது.



– எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி
செல்: 9750333265

e-magazine
aanmeegamalar.com



# சிவ பெயர்ச்சி

சனிப்பெயர்ச்சி, குரு பெயர்ச்சி, ராகு கேது பெயர்ச்சி கேள்விபட்டிருப்பீர்கள்!

சிவ பெயர்ச்சி கேள்வி பட்டுள்ளீர்களா?

ஆம் சிவன் ஆலகால விஷத்தை உண்டு ருத்ர தாண்டவம் ஆடியபோது பிரளயம் உண்டாகியது

ருத்ர மூர்த்தியாக சிவன் கோபம் கொண்டு ஆடியதை கண்ட பார்வதி மனமுருகி ஸ்வாமி யை வேண்டி கோபத்தை குறைத்து சாந்த ஸ்வரூபனாக பகவான் சகல உயிர்களையும் காக்க வேண்டும் என வேண்டினாள்.

பகவான் அம்பாளின் வேண்டுதலை ஏற்றுகோப மான ருத்ர ரூபத்திலிருந்து சாத்வீகமான சதாசிவ ரூபத்திற்கு மாறிய தினமே "சிவப்பெயர்ச்சி"

ஒவ்வொரு வருடமும் தை மாதம் கடைசி திங்கட்கிழமை நாளில் வருவதே இந்த சிவப் பெயர்ச்சி!

இந்த சிவப்பெயர்ச்சி தினத்தில் பகவானின் அருள் என்பது மிகப்பெரிய தடைகளை விலக் கும்.

இன்றைய கலியுகத்தில் கடன் வியாபாரம் என பல வித மன அழுத்தத்தால் மனித குலம் அதீத கோபத்திற்கு ஆளாகிறது.

அப்படிபட்ட கோபத்தை அழித்து சாந்தம் அன்பு கருணை குணம் மாறக்கூடிய தினமே சிவப்பெயர்ச்சி.

ஏழரை சனி அஷ்டமசனி,ஜென்ம குரு, ராகு,கேது தீவினைகள் என எல்லாவித கிரக தோஷங்களையும் விலக்கும் ஒரே தினம் தை மாதத்தில் வரும் கடைசி திங்கட்கிழமையே.

அனைத்து ராசியினரும் சிவப்பெயர்ச்சி அன்று சிவனை சந்தனத்தால் அபிஷேகம் செய்தால் கடன்,நோய், விலகும். சொல் வாக்கு செல்வாக்கு திரும்ப கிடைக்கும்.

மனம் அமைதி பெறும்.கோபம் குறையும் , வீட்டில் அமைதி தங்கும்.

பிப்ரவரி 9 ம்தேதி 2026 (தை26) தை மாதத்தில் வரும் கடைசி திங்கட் கிழமையன்று அருகிலுள்ள சிவாலயங்களுக்கு சென்று சிவனுக்கு சந்தன அபிஷேகம் செய்யுங்கள்.

சிவப்பெயர்ச்சிக்கான

விஷேச ஸ்தலம், மயிலாடுதுறை அருகில் உள்ள முட்டம் குளத்தங்கரை கிராமத்தில் உள்ள " ஸ்ரீமஹாபலீஸ்வரர்"

சிவன் கோவிலே சிவப்பெயர்ச்சிக்கான

விஷேச ஸ்தலம் ஆகும். இது மஹாபலிச் சக்கரவர்த்தி தான் இழந்த செல்வம் புகழ் சொல் வாக்கு என அனைத்தையும் மீட்டெடுத்த தலமாகும்.

– சௌமியா சுப்ரமணியன்
'பிருந்தாவனம்' 18, பத்மநாபன் தெரு,
பழைய பல்லாவரம்.

# கண்டோபா
# சிவபெருமான்

கண்டோபா சிவன் மகாராஷ்டிர மாநிலத்தின் ஜெஜூரியில் அமைந்துள்ள, சிவனின் வடிவமான கண்டோபா கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு புகழ் பெற்ற இந்து கோவில் ஆகும். இந்த கோயில் ஒரு கோட்டையை ஒத்திருக்கிறது மற்றும் சுற்றுப்புறங்களின் பரந்த காட்சிகளை வழங்குகிறது.

இது பல பக்தர்களை ஈர்க்கும் ஒரு முக்கியமான வழிபாட்டுத் தலமாகும். கண்டோபா வழிபாட்டில் இந்து மற்றும் சைன மரபுகளின் கலப்பைக் காணலாம், இது சிவன், முருகன், சூரியன் போன்ற தெய்வங்களின் கலப்பால் உருவானதாகக் கருதப்படுகிறது. இந்த கட்டிடக்கலை மராட்டிய மற்றும் பாரம்பரிய கோயில் பாணிகளின் கலவையாகும், பெரிய முற்றம், தூண் தாழ்வாரங்கள் மற்றும் சிக்கலான சிற்பங்களுடன் காணப்படுகிறது.

கண்டோபா கந்தேராவ், கந்தேரே, மல்ஹாரிமார்டண்ட் மற்றும் மல்ஹர் என்றும் அழைக்கப்படும் மத்திய தெய்வமான கண்டோபா, மகாராஷ்டிராவின் மிகவும் பிரபலமான தெய்வங்களில் ஒன்றாகும். கண்டோபா சிவபெருமானின் அவதாரமாக கருதப்படுகிறது. இவரை மார்த்தாண்ட பைரவர் என்றும் அழைப்பர்.

மணி மற்றும் மல்லா என்ற இரண்டு ராட்சச சகோதரர்கள் தங்கள் தவங்களால் பிரம்மாவை மகிழ்வித்தனர். பிரம்மாவின் வரத்தால், அவர்கள் மிகவும் சக்தி வாய்ந்தவர்களாக மாறி, பூமியில் அழிவைத் தொடங்கினர், மக்களைத் துன்புறுத்தினர். இதன் விளைவாக, மணி மற்றும் மல்லாவை அழிக்க கடவுள் சிவன் கண்டோபாவின் அவதாரத்தில் பூமிக்கு வந்தார்.










ஒரு கடுமையான போரில், கண்டோபா ஒரு அரக்கனைக் கொன்றார், மேலும் பொது மக்களுக்கு சேவை செய்வதாக உறுதியளித்த போது மற்றொன்றை மன்னித்தார்.

கண்டோபா மகாராஷ்டிராவின் பல மக்களின் குலதேவதா (மூதாதையர் வழிபாட்டு தெய்வம்) ஆவார். குன்பிமராட்டியர்கள் ஜாதிகள், தங்கர் பழங்குடியினர், மேய்ப்பர்கள், மகாராஷ்டிராவின் நாடோடி மக்கள் ஜெஜூரியின் கண்டோபா என்னும் பைரவரை தங்கள் குல தெய்வமாக வணங்குகிறார்கள்.

கண்டோபா கோயில்களில் மஞ்சள் தூள் ஒரு முக்கிய பிரசாதமாகும், குறிப்பாக மகாராஷ்டி ராவில் உள்ள ஜெஜூரி கோயிலில், பக்தர்கள் மஞ்சள் பொடியை எறிந்து, கோயில் படிகள் மற்றும் வளாகத்திற்கு மஞ்சள் நிறத்தை வழங்குவது ஒரு தனித்துவமான பாரம்பரியமாகும்.



இது கண்டோபாவுக்கு பக்தியைக் காட்ட செய்யப்படுகிறது, அவர் பெரும்பாலும் மஞ்சள் கிண்ணத்தை வைத்திருப்பதாக சித்தரிக்கப்படுகிறார், மேலும் அதனுடன் நெருங்கிய தொடர்புடையவர், கோயிலுக்கு "மஞ்சள் பக்தியின் தங்கக் கோயில்" என்ற புனைப் பெயரைக் கொடுக்கிறார்.

எப்படி செல்வது: புனே ரயில் நிலையத்தில் இருந்து 47 கி.மீ.

விசேஷ நாள்: சம்பா சஷ்டி, சோமவதி அமாவாசை, பந்தாரா திருவிழா

கோவில் நேரம் காலை 6:30 மணி முதல் மதியம் 12,00 மணி வரை, மதியம் 1.00 மணி முதல் இரவு 8:30 மணி வரை


தொடர்புக்கு: 9881043282

அருகில் உள்ள தலம் ஸ்ரீமந்த் தக்துஷேத் ஹல்வாய் கணபதி மந்திர் 48 கி.மீ. கோவில் நேரம் காலை 5:30 மணி முதல் இரவு 11.00 மணி வரை தொடர்புக்கு: 02024492000

–டெல்லி தியாகராஜன்
9868423215


ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
இதுவரை வெளிவந்த
195க்கும் மேற்பட்ட இதழ்களை
எந்தவித கட்டணமும் இன்றி
இலவசமாக படித்து மகிழ!
ஆன்மிகமலர்
e-magazine
195+
aanmeegamalar.com இணையதளத்தில்
இபுத்தகம் பகுதியில்
படித்து மகிழுங்கள்!
www.aanmeegamalar.com

# ஆன்மீக வழியில் அமைதி



நாம் வீணாகப் பேசுவதை விட மௌனம் சிறந்த மொழி ஆகும். நாம் கூறும் வார்த்தைகளை விட மௌனம் சிறந்தது. சுயகட்டுப்பாடு மற்றும் அமைதிக்கான திறவுகோல் மௌனம் ஆகும். புத்தர் மௌனத்தின் சிறப்பு பற்றி மிகவும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

நீண்ட காலத்திற்கு முன்பு மகத ராஜ்யத்தில் அனுஸ்மான் என்ற இளைஞன் வசித்துவந்தான். அவன் பொறுமையற்றவனாகவும் கோபக்காரனாகவும் இருந்தான். எளிமையான கேள்விக்கும் சிறிய விசயங்களுக்கும் விவாதிப்பதும் ஒவ்வொரு கேள்விக்கும் தேவையில்லாமல் பதில் அளிப்பதும் அவனுக்கு வழக்கமாகி விட்டது. அவனுடைய இத்தகைய குணத்தினைக் கண்டு மக்கள் நாளடைவில் அவனிடமிருந்து விலகிச் செல்லத் தொடங்கினர்.

ஆன்மிகமலர்

அனுஸ்மானின் குணம் மற்றும் அவனது விதண்டவாதத்தால் அவனுடைய அமைதியை முற்றிலும் அனுஸ்மான் இழந்திருந்தான்.

அனுஸ்மான் தன்னுடைய கோபம் மற்றும் விதண்டாவாதம் போன்றகுணங்களிலிருந்து எப்படி மாறுவது என்றுஅவனுக்குத் தெரியவில்லை. ஒருநாள் புத்தர் காட்டிற்கு வந்திருப்பதை அறிந்து அவரை சந்தித்து தன்னோட மனதில் தோன்றும் கேள்விகளை கேட்க வேண்டும். அதற்கு அவரிடமிருந்து தனக்கு தகுந்த பதில் கிடைக்கும் என்று எதிர்பார்த்தான்.

அவன் புத்தரை சந்திக்கும்போது புத்தர் சீடர்களுக்கு மௌனத்தின் முக்கியத்தைப் பற்றி நன்கு விளக்கிக்கொண்டு இருந்தார். மனிதன் வாழ்க்கையில் அமைதியாக இருக்க வேண்டுமானால் அவன் தவறாமல் மௌனத்தைக் கடைப்பிடித்து வர வேண்டும் என்று கூறினார்.

அதனைக் கேட்ட அனுஸ்மானுக்கு ஒரு நம்பிக்கை பிறந்தது. அவன் புத்தரை வணங்கி வாழ்க்கையில் அமைதியாக வாழ்வதற்குரிய வழிமுறைகளை கூறும்படி வேண்டினான்.

பொறுமையாக இருந்து எனது போதனைகளைக் கேட்டு அதன்படி நீ நடக்க சம்மதித்தால் நான் கூறுகிறேன் என்று புத்தர் கூறினார். அனுஸ்மான் உனது குணம் மற்றும் செயல்களை பற்றி மற்றவர்களிடமிருந்து விமர்சனங்கள் வரும்போது நீ பொறுமையாக மௌனமாக இருக்க வேண்டும். மௌனமாக இருக்கும்போது அந்த விமர்சனங்கள் உனக்கு ஒரு பாடத்தைக் கற்பிக்கும். அதற்கு மாறாக விமர்சனங்களுக்கு நீ கோபமாக பதில்

87



அளித்தால் செயல்புரிந்தால் நீ மௌனத்தின் பயனை அடைய முடியாது. அதாவது உனது மனம் அமைதியாக இருக்க முடியாது என்று கூறி னார். மௌனமாக இருந்து விமர்சனங்கள் பற்றி சிந்தித்து அவை சரியானதா? என்பது பற்றி பொறுமையாக நினைத்துப் பார்க்க வேண்டும்.

புத்தர் அஸ்மானிடம் தன்னுடைய வாழ்வில் நடந்த சம்பவத்தைப் பற்றி கூறினார். நான் சீடர்களுடன் காட்டு வழியே நடந்து செல்லும் போது ஒருவன் தன்னைத் தொடர்ந்து வந்து தரக்குறைவாகப் பேசினான். நான் பொறுமையாக மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தேன். அவன் பேசி முடித்தவுடன் அவனிடம் நீ ஒருவனுக்கு விரும்பி கொடுக்கும் பரிசை அவன் வாங்கு வதற்கு மறுத்தால் நீ என்ன செய்வாய் என்று கேட்டேன். அவன் பரிசை ஏற்க மறுத்தால் பரிசுப்பொருளை நானே வைத்துக் கொள்வேன் என்றான்.

அதேபோல்தான் நீ இப்போது என்னைப்பற்றி என்னிடம் கூறிய வார்த்தைகளையும் நான் ஏற்றுக் கொள்ளவில்லை. அவன் அதனைப் புரிந்து கொண்டு தலை குனிந்து சென்று விட்டான். இதனை நாம் கடைபிடிப்பது கடினம். பொதுவாக நாம் உணர்ச்சி மிகுதியில் கோபப் படாமல் பொறுமையாக மௌனமாக இருந்து பழகி விட்டால் நம்மை நாமே சுயபரிசோதனை செய்து கொள் வதற்கு முடியும் என்று விளக்கினார்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

மனிதர்கள் விவாதங்களின்போது மௌனமாக இருந்தால் எதிலும் வெற்றி பெறுவதற்கு முடியும். அப்படிப்பட்ட மனிதர்களுக்கு அமைதியும் கிடைக்கும். நாம் மௌனமாக இருக்கும்போது சரியான முடிவை எடுக்க முடியும்.

புத்தரிடம் ஒரு சமயம் இரு விவசாயிகள் வந்தார்கள். இருவரும் ஒரு நிலத்தை தங் களது என்று ஒருவருக்கொருவர் விவாதம் செய்து கொண்டு உரிமை கொண்டாடினர். அப்போது புத்தர் அவர்களிடம் நீங்கள் பிறக்கும்போது இந்த நிலத்தைக் கொண்டு வந்தீர்களா? அல்லது நீங்கள் இறக்கும்போது இந்த நிலத்தை உங்களோடு எடுத்து செல்வீர்களா? என்று கேட்டவுடன் இருவரும் புரிந்து கொண்டனர். விவாதம் செய்வதை நிறுத்தி விட்டு அமைதியாக சென்றார்கள்.

விவாதங்களின்போது அதிகமாக பேசுவதை விட பொறுமையைக் கடைப்பிடித்து மௌனமாக இருப்பது பயனுள்ளது என்ற ஒரு போதனையை அனுஸ்மானுக்கு கற்றுக்கொடுத்தது.

ஒருவர் கோபமாக இருக்கும் போது நாம் மௌனமாக இருந்து பழக வேண்டும். கோபம் என்பது நெருப்பைப் போன்றது. அதுநெருப்பு போல் பற்றிக் கொள்ளும். கோபம் கடந்த பிறகு மௌனமாக இருந்து பேசினால் இருவருக்கும் நல்லது. ஒருவன் பொறுமையாக மௌனமாக இருந்தால் அவனது கோபத்தின்



சக்தி தானாகவே குறைந்து விடும். அதாவது நமது மனம் அமைதி அடைந்து விடும் என்பதை அனுபவம் மூலம் உணரலாம்.

இதற்கு புத்தர் ஒரு கதை கூறினார். மன்னன் ஒருவன் தன்னோட மந்திரி செய்த குற்றத்திற்காக கோபத்துடன் தூக்கிலிடக் கட்டளையிட்டான். அதைக்கேட்ட மந்திரி தன்னோட விதியை நினைத்து மௌனமாக இருந்தார். மன்னன் தனிமையில் இருக்கும்போது மந்திரிக்கு கொடுத்த தண்டனையை நினைத்து மிகவும் வருந்தினான்.

உடனே தண்டனையிலிருந்து மந்திரியை விடுவித்தான். மன்னன் கோபப்படும்போது மந்திரி ஏதேனும் பேசியிருந்தால் மன்னனின் கோபம் மேலும் அதிகரித்து அவனது உயிர் போயிருக்கும். மந்திரியின் மௌனம் அவனது உயிரைக் காப்பாற்றியது.

அஸ்மான் ஒருநாள் வருத்தத்துடன் காணப்பட்டான். அவன் புத்தரிடம் தனது துக்கத்தைத் தாங்க முடியவில்லை என்றான். புத்தர் அவனிடம் உனக்கு துக்கம் வரும்போதெல்லாம் மௌனமாக இருந்து விடு. மனிதனது துக்கம் அவனுக்கு படிப்பினைக் கொடுக்கலாம். இதனை உணர்ந்து ஒருவன் மௌனமாக இருந்தால் அவனதுதுக்கம் அவனுக்கு பயனுள்ள சிந்தனையாக மாறும்.

ஒருவன் உன்னை வேண்டுமென்று தேவையில்லாமல் விமர்சிக்கும்போது மௌனமாக இருந்து விடு. உனது பொறுமை மற்றும் வலிமையையும் அது காட்டும். அதன்மூலம் நீ ஒரு அனுபவத்தையும் பெறுவதற்கு முடியும். உன்னோடு அமைதிக்கும் அது வித்திடும்.

எடுத்துக்காட்டாக ஒரு துறவியை பொது மக்கள் சிலர் கல்லால் அடித்தார்கள். அந்த துறவி எதிர்ப்பு தெரிவிக்காமல் மௌனமாக அதனைப் பொறுத்துக்கொண்டார். அவருடைய பொறுமையை மௌனத்தை உணர்ந்த பொது மக்கள் அமைதியாக கலைந்து சென்றனர். அவருடைய மௌனம் பொதுமக்கள் மனதை ஒரு நொடிப்பொழுதில் மாற்றி விட்டது.

எல்லா இடங்களிலும் பிறருக்கு உதவ வேண்டியதில்லை. அதேபோல் தேவையில்லாத போது உன்னுடைய அறிவுரைகளை அல்லது போதனைகளை பிறர் கேட்காதபோது நீ மௌனமாக இருந்து பழகு. அவ்வாறு இருப்பது வீண் விவாதங்களை தவிர்க்கலாம். உன்னுடைய அறிவுரைகளை போதனைகளை மற்றவர்கள் மீது வலிய திணிக்க நினைக்கக்கூடாது. அப்போதெல்லாம் நீ மௌனமாக இருந்தால் உனக்கு மிகவும் நல்லது.

உன்னுடைய அறிவைப்பற்றி பிறர் பெருமையாக கூறும்போது மௌனமாக இருப்பது நல்லது. அறிவு பணிவின் ஆரம்பம் ஆகும். அறிவை பிரசுரம் செய்தால் அது பொம்மைபோல் ஆகி விடும் என்பதை உணர்ந்து கொள்.

யாராவது நீ கூறும் உண்மையை ஏற்றுக் கொள்ள தயங்கும்போது அல்லது ஏற்க மறுக்கும்போது மௌனமாக இருக்கப் பழகு. உண்மையை ஏற்கும்வரை நீ அவரிடம் விவாதிப்பது உன்னோட சக்தியும் நேரமும் வீணாக்கப்படுகிறது. எனவே உன்னோட சக்தி நேரம் வீணாக்காமல்

மௌனமாக இருப்பது நல்லது.

எடுத்துக்காட்டாக ஒரு துறவி மன்னனிடம் உண்மையின் வலிமை பற்றி கூறினார். அப்போது மன்னன் அதனை ஏற்றுக்கொள்ளாமல் துறவியை கோபத்துடன் வெளியே போகும்படி கூறினான். துறவி அதற்கு மறுப்பு ஏதும் கூறவில்லை. மன்னா நீ நான் கூறும் உண்மையை ஏற்றுக்கொள்ளத் தயாராகும்போது நான் வருவேன் என்று கூறிச் சென்றார்.

மன்னன் சில ஆண்டுகள் கழித்து துறவி கூறிய உண்மையை சிந்தித்து ஏற்றுக்கொண்டார். துறவியின் பொறுமை அவரது மௌனம் மன்னன் உண்மையை ஏற்றுக்கொள்ளும்படி செய்தது.

சூழ்நிலைகள் மனிதர்கள் கட்டுப்பாட்டில் இல்லாதபோது மௌனமாக இருக்க வேண்டும். பொதுவாக சூழ்நிலைகள் சரியில்லாதபோது மனிதர்களுக்கு கோபம் ஏற்படும். அதனால் உன்னை இழந்து விடுவாய் என்பதை நீ உணர்ந்து கொள்ள வேண்டும். உனக்கு சூழ்நிலைகள் சரியில்லாதபோது மௌனமாக இருப்பதே மிகுந்த அறிவுள்ள செயலாகும். மௌனமாக இருப்பது பலவீனம் அல்ல. அது பலம் என்பதை உணர்ந்து மௌனத்தை கடைப்பிடிக்க கற்றுக் கொள்ளுங்கள் என்று புத்தர் போதித்தார்.

ஒரு விவசாயி புத்தரிடம் மழையில்லை என்று வருத்தப்பட்டார். புத்தர் அவரிடம் மழையை நீ கொண்டு வர முடியாது. அதாவது சூழ்நிலையை உன்னால் மாற்ற முடியாது. ஆனால் வருத்தப்படும் உனது மனநிலையை மாற்றிக்கொள்வதற்கு முடியும்.

அதாவது மழையில்லை என்ற உனது மன நிலையை மாற்றிக் கொள்வதற்கு முடியும். அதற்கு வேறு ஒரு தீர்வைக் காண முடியும். அதன்மூலம் உனது வருத்தப்படும் சூழ்நிலை மாறும். சூழ்நிலை மாறும்வரை மௌனமாக இரு என்று புத்தி கூறி அனுப்பினார் புத்தர்.


உன் இதயம் ஒரு திறவுகோல். மனிதர்களேஇத யத்தில் அன்பு நன்றி போன்றவற்றால் நிரப்பு. இதற்கு வார்த்தைகள் தேவையில்லை. மௌனமாக இரு. சூழ்நிலையில் மௌனம் ஒரு மொழியாகவே மாறி விடும். மௌனம் ஆன்மாவின் வெளிச்சம். ஆன்மாவின் குறியீடு ஆகும் என்பதை உணர முடியும் என்று புத்தர் போதித்தார்.

– அமைதி தொடரும்

எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

# பதினோரு உலகை குறிக்கும் ராஜகோபுரம்

கும்பகோணம் ஸ்ரீசாரங்கபாணி பெருமாள் திருக் கோவிலின் ராஜகோபுரம் மிகவும் பிரம் மாண்டமானது.



வைணவத் திருத்தலங்களில் மிக உயர்ந்த ராஜகோபுரம் என்பது 247 அடி உயரம் கொண்ட ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் ஆகும்.

அதற்கு அடுத்த படியாக உயரம் மிக்கது, ஸ்ரீவில்லிபுத்தூர் திருக்கோவிலின் ராஜ கோபுரம் ஆகும். நம் தமிழக அரசின் சின்னமாக அந்தக் கோபுரமே இன்றளவும் திகழ்கிறது.

இந்த இரண்டு கோபுரங்களுக்கு அடுத்த படியாக உயரம் மிக்கது கும்பகோணம் சார்ங்க பாணிப் பெருமாள் கோவிலின் ராஜகோபுரம். ஆனால் மற்ற இரண்டு கோபுரங்களைக் காட்டி லும் கும்பகோணம் ராஜகோபுரத்தில் சிற்ப வேலைப்பாடுகள் மிகவும் அதிகம்.

சுமார் 150 அடி உயரம் கொண்ட அந்தக் கோபுரத்தில் உள்ள பதினொரு அடுக்குகள் வைகுண்டத்தை நோக்கிய பாதையான அர்ச்சிராதி மார்க்கத்தில் உள்ள பதினொரு உலகங்களைக் குறிப்பதாகப் பெரியோர்கள் சொல்லுவார்கள்.

இதுவரை வெளிவந்த

# 195 க்கும் மேற்பட்ட

# இதழ்களை

**aanmeegamalar.com**

இணையதளத்தில்
இலவசமாக
படிக்கலாம்

eBook DOWNLOAD free

Scan to Read
aanmeegamalar
e-book









# சூரியனும் சந்திரனும் எதிரெதிரே அமைந்த திருக்கோவில் மஹாலட்சுமி வழிபட்ட சிவஸ்தலம்

சோழ மன்னன் ஒருவன் தினந்தோறும் சிதம்பரம் சென்று நடராஜரை தரிசிக்கும் வழக்கம் உடையவன். அவ்வாறு தனது படைகளுடன் செல்லும் போது இத்தலம் இருக்கும் காட்டு வழியே தான் தினமும் செல்வான்.

இரவு நேரத்தில் தீப்பந்தங்களுடன் இவ்வழியே செல்லும் போது தீப்பந்தங்கள் தானாகவே அணைந்து, இத்தல எல்லையைத் தாண்டியவுடன் தானாகவே எரிய ஆரம்பிக்கும். இவ்வாறு பல நாட்கள் தொடர்ந்து நடைபெற, மன்னன் காட்டில் மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த ஒரு இடையனிடம் இத்தலத்தில் ஏதேனும் விசேஷம் உண்டா? எனக் கேட்டான். இடையன் பசுக்கள் இங்கு ஓரிடத்தில் தானாகவே பாலை கறப்பதைக் கண்டதாகக் கூறினான். மன்னன் அவ்விடத்தில் நிலத்தைத் கோடாரியால் தோண்ட இரத்தம் வெளிப்பட்டது. மன்னன் மேலும் அவ்விடத்தை ஆராய ஒரு சிவலிங்கம் இருப்பதையும், அதன் பாணத்தின் மேல் பகுதியில் கோடாரி பட்டு இரத்தம் வருவதையும் கண்டு மிவும் வருத்தம் அடைய, அப்போது அசரீரி மூலம் இறைவன் தான் இருக்குமிடத்தை தெரியப்படுத்தவே இவ்வாறு செய்ததாகக் கூறி, இவ்விடத்தில் ஆலயம் எழுப்ப மன்னனுக்கு ஆணையிட்டார். மன்னனும்



சிவலிங்கம் இருந்த அதே இடத்தில் கோவிலைக் கட்டினான் என்று தல வரலாறு கூறுகிறது.

இன்றும் சிவலிங்கத்தின் பாணத்தில் கோடரி வெட்டிய தழும்பு குழி போல இருப்பதைப்




பார்க்கலாம்.

இந்த சம்பவம் "அனுஷம்" நட்சத்திர நாளில் நடந்தது. எனவே "அனுஷம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வழிபட வேண்டிய ஆலயம் இது" என்று கருதப்படுகிறது.

மஹாலட்சுமி தேவி சிவனை வழிபட்டதலம் என்பதால் இத்தலம் திருநின்றியூர் என்று அழைக்கப்படுகிறது.

பரசுராமர் தனது தந்தை ஜமதக்னிமுனிவரின் ஆணைப்படி தனது தாயான ரேணுகாவைக் கொன்றார். பின் தனது தந்தையிடம் அன்னையை உயிர்ப்பிக்கும் படி வரம் வேண்டி தாயை உயிர்ப்பித்தார்.

தாயைக் கொன்ற தோஷம் நீங்கு வதற்காக பரசுராமன் இத்தலத்தில் இறைவனை வழிபட்டு மன அமைதி பெற்றார்.

ஜமதக்னி முனிவரும், தான் அவசரத்தில் செய்த செயலுக்கு வருந்தி இங்கு சிவபெருமானை வணங்கி மன்னிப்பு கேட்டுக் கொண்டார். சிவன் இருவருக்கும் காட்சி தந்து அருள் செய்தார்.

நவக்கிரகங்களின் அமைப்பு இக்கோயிலில் சூரியனும் சந்திரனும் எதிரெதிரே உள்ளனர்.

மற்ற எல்லாக் கோயில்களில் இருந்தும் இது மிகவும் வித்தியாசமானது.

எனவே மக்கள் தங்கள் முன்னோர்களின் இரட்சிப்புக்காக அமாவாசை நாளில் பிரார்த்தனை மற்றும் சிறப்பு பூஜைகளை செய்கிறார்கள்.

இத்தலத்து இறைவனை வழிபடுபவர்களுக்கு அனைத்து பாவங்களும், பயமும் நீங்கும். எல்லா பிரச்சனைகளும் நீங்கும்.

இக்கோயில் தருமையாதீனத்தின் கோயில். மூலவர்: லட்சுமிபுரீசுவரர், மகாலட்சுமீசர், தாயார்: உலக நாயகியம்மை, லோகநாயகி, தல விருட்சம்: விளாமரம், தீர்த்தம்: இலட்சுமி தீர்த்தம்

இத்தலத்தில் சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவராலும் தேவாரப் பாடல் பெற்ற தலமாகும். அகத்தியர், பரசுராமர் மற்றும் திருமகள் வழிபட்ட திருத்தலம்.

அருள்மிகு மகாலட்சுமிபுரீசுவரர் திருக்கோயில், திருநின்றியூர், மயிலாடுதுறை மாவட்டம் 609118. வைத்தீஸ்வரன்கோயில் மயிலாடுதுறை சாலை மார்க்கத்தில் திருநின்றியூர் இருக்கிறது.

பிரதான சாலையிலிருந்து கோவில் செல்ல பிரிந்து செல்லும் சாலையில் சுமார் 1 கி.மீ. சென்று இத்தலத்தை அடையலாம். மயிலாடுதுறையிலிருந்து சுமார் 7 கி.மீ. தொலைவில் உள்ளது. மயிலாடுதுறையில் இருந்து ஏராளமான பேருந்துகள் உள்ளன.

– சௌமியா சுப்ரமணியன்
பழைய பல்லாவரம், போன்: 9940460969

# ஆன்மிகமலர்.காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

FREE

# 176 e-books

## 1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்

முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை

பாருங்கள்... டவுன்லோடு
செய்து படியுங்கள்...



## aanmeegamalar.com



தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com

# கட்டாய சந்தா இல்லை!

# சப்ஸ்கிரைப் இல்லை!!

# மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

## ஆன்மிகமலர்.காம் வழங்கும்
## ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

ஒரே கிளிக் 195 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# தெய்வம் எதற்காக என்று புரிவதற்கு தோன்றியதே மதம்

e-magazine
aanmeegamalar.com

சீடன்: கடவுளைப் பார்க்க முடியுமா?

ஞானி: (சிரித்தபடி) மனிதனின் உணர்வும் பக்தியும் இணையும்போது கடவுளைப் பார்க்கலாம்.

சீடன்: தியானப் பயிற்சிகள் எப்படி இருக்க வேண்டும்?

ஞானி: சுருக்கமாக இருக்க வேண்டும்.

சீடன்: ஞானம் என்றால் என்ன?

ஞானி: பிரபஞ்சத்தின் உண்மையைத் தெரிந்து கொள்வது.

சீடன்: குரு அனுக்கிரகம் என்றால் என்ன?

ஞானி: சொல்லாமல் விளங்குவது.

சீடன்: அறிவு விளக்கம் என்றால் என்ன?

ஞானி: சரியான பாதையைக் காட்டுவது.

சீடன்: அனுபவம் என்றால் என்ன?

ஞானி: நாமே நம்மிடம் உள்ள இறைவனை வெளிக்காட்டுவது.

சீடன்: பூஜைகள் எதற்கு?

ஞானி: நம் வாழ்வு முன் எல்லாவித கலை களையும் உணர.

சீடன்: மனிதன் எதற்கு ஆராய்ச்சி செய் கிறான்?

ஞானி: (சிரித்தபடி) ஆர்வத்தின் கோளாறு.

சீடன்: அறிவு என்றால் என்ன?

ஞானி: பிரபஞ்சத்தைப்பற்றிஇறை வனைப் பற்றி எல்லை யில்லாமல் தெரிந்து கொள்ள தேவைப்படும் ஞானத்திற்கு அறிவு எனப்படும்.

சீடன்: அனுஷ்டானம் என்றால் என்ன?

ஞானி: தினம் தினம் ஆண்டவனை வழிபடுவது.

சீடன்: விஞ்ஞானி என்பவன் யார்?

ஞானி: காலத்தைக் கடந்தவன். காலத்தை வெல்லத்தான் மனிதன் காலமெல்லாம் முயலுகிறான்.

சீடன்: புண்ணியம் என்றால் என்ன?

ஞானி: நம்மைப் பற்றி நமக்கே புரிவதுதான்.

சீடன்: பக்தன் எப்பொழுது உருவாகிறான்?

ஞானி: மனம் ஆண்டவனுக்காகச் செயல்படும்போது.

சீடன்: தியானம் என்றால் என்ன?

ஞானி: மனதோடு சம்பந்தப்பட்ட அனைத்து பயிற்ச்சிகளுக்கும் தியானம் எனப்படும்.

சீடன்: ஞானம் உருவாக வழி என்ன சுவாமி?

ஞானி: மனச்சோம்பல் அகன்றால் தன் மூளை யையே கவனிக்காமல், அது ஞானம் உருவாக வழி.

சீடன்: குண்டலினி யோகம் என்றால் என்ன?

ஞானி: உடலையும் மனதையும் சேர்ப்பது குண்ட லினி.

சீடன்: கடவுளை செயற்கை எனக் கூறுகி றார்களே?

ஞானி: மறைந்திருந்த கடவுளை மனிதன் கண்டுபிடித்ததால் அதை செயற்கை என்று சொல்லக் கூடாது.

சீடன்: பக்திக்கு உலகைத் துறக்க வேண்டுமா?

ஞானி: உலக அனுபவம் பெற்ற பின்புதான் பக்தி அனுபவமே தோன்றுகிறது.

சீடன்: பூஜைகள் கட்டாயம் செய்ய வேண்டுமா?

ஞானி: பூஜை செய்ய ஆசைப் படாதே. ‘விருப்பத்தைத் தா’ என்று எண்ணி பிராத்தனை செய்.



சீடன்: கடவுளைப் பற்றி எல்லோரும் பேசுகின்றனரே?

ஞானி: க ட வு ளை ப் பார்க்காதவனுடன் கடவுளைப் பற்றி பேசுவது திண்ணைப் பேச்சு.

சீடன்: சமயம் எப்படி இருத்தல் வேண்டும்?

ஞானி: உ ண ர் ச் சி க ளோ டு

அணுகும் விஷயம் இல்லை சமயம். மனிதன் எல்லா விஷயங்களையும் உணர்ச்சிக ளோடுதான் அணுகுவதால் சமயத்தில் குழப்பம் தோன்றுகிறது.

சீடன்: கொள்கையில் உறுதி கொள்வது எப்பொழுது?

ஞானி: கொண்ட கருத்தில் பக்தி வரும்போது.

சீடன்: ஆணவம் மறைவது எப்பொழுது?

ஞானி: மனமும் பணமும் ஒன்று என உணரும்போது.

சீடன்: கடவுளிடம் பக்தி வருவது எப்பொழுது?

ஞானி: மண்ணின் மீது பக்தி வரும்போது.

சீடன்: பக்தியைப் பற்றி முழு விவரம் உணருவது எப்பொழுது?

ஞானி: வழிபாட்டிற்குள் போகும்போது.

சீடன்: பாவமே செய்யாத மனிதனாவது எப்பொழுது?

ஞானி: இறைவனை எண்ணாமல் இருப்பதே பாவம் என உணரும்போது.

சீடன்: மனிதன் பக்தனாவது எப்பொழுது?

ஞானி: அற்புதத்தை கண்டு பிரமிக்காமல் ரசிக்கும்போது.

சீடன்: மனிதன் நிம்மதியாக இருப்பது எப்பொழுது?

ஞானி: எந்தச் சட்டங்களையும் தனக்கு போட்டுக் கொள்ளாதபோது.

சீடன்: ஞானம் வருவது எப்பொழுது?

ஞானி: நம் வெட்கத்தில் தான் கடவுள் ஒளிந்து கொண்டிருக்கிறான் என்று உணரும்போது.

சீடன்: ஞானம் வருவது எப்பொழுது?

ஞானி: தடைகளும் தாமதங்களும் தானாக விலகும்போது.

சீடன்: சிந்தனையாளன் உருவாவது எப்பொழுது?

ஞானி: எல்லாம் வல்லவன் மனிதன் என எண்ணும்போது.

சீடன்: பக்தன் உருவாவது எப்பொழுது?

ஞானி: எல்லாம் வல்லவன் இறைவன் என உணரும்போது.

சீடன்: சக்தி நமக்கு வருவது எப்பொழுது?

ஞானி: கடவுளோடு நம்மை சம்பந்தப்படுத்திக் கொள்ளும்போது.

சீடன்: இறைவன் மனிதனிடம் எதிர்பார்ப்பது என்ன?

ஞானி: கடவுள் மனிதர்களிடம் மொத்த அபிப்பிராயத்தையோ தனிப்பட்ட அபிப் பிரயாங்களையோ எதிர்ப்பார்ப்பதில் லை.

சீடன்: மதங்கள் ஏன் தோன்றின?

ஞானி: தெய்வம் எதற்காக என்று புரிவதற்கு.

சீடன்: ஆசாரம் என்றால் என்ன?

ஞானி: கொள்கையைக் கடைப்பிடிக்கும் தன்மை.

ஞானச்சேரி ஞானிகள்

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல்
♦♦♦
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.



ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203




aanmeegamalar.com e-magazine